# மட்டக்களப்பில்
# மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் நிலை | 2023-2024

NATIONAL CHRISTIAN EVANGELICAL ALLIANCE
SRI LANKA

மட்டக்களப்பில் மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் நிலை | 2023-2024

© 2024 National Christian Evangelical Alliance of Sri Lanka (NCEASL)
URL: www.nceasl.org

All rights reserved.

இந்த வெளியீட்டின் காப்புரிமையானது இந்த அறிக்கைக்கான அறிவுசார் சொத்துரிமை மற்றும் விநியோக உரிமைகளைக் கொண்டிருக்கும் இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷ கூட்டணிக்கு (NCEASL) சொந்தமானது.

NATIONAL CHRISTIAN EVANGELICAL ALLIANCE SRI LANKA

மட்டக்களப்பில்

# மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் நிலை | 2023-2024

இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷ கூட்டணி

2024

# அங்கீகாரங்கள்

இந்த அறிக்கை இரண்டு கள ஆலோசகர்களின் உதவியுடன் எழுதப்பட்டது. இந்த அறிக்கையைத் தொகுப்பதற்காக சிரானி தேவகுமார், அநாமதேயமாக இருக்க விரும்பும் இரண்டாவது ஆலோசகர் ஆகியோர் - மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள சமூக உறுப்பினர்களிடமிருந்து தரவுகளைச் சேகரிப்பதில் முக்கிய பங்கை ஆற்றினார்கள்.

செப்டெம்பர் 2024

# உள்ளடக்கம்

1 நிறைவேற்றுச் சுருக்கம்

2 முறைமையியல்

3 அறிமுகம்
4 தற்போதைய நிலைமையின் கண்ணோட்டம்

5 ஆய்வு கண்டுப்பிடிப்புகளிலிருந்து FoRB நிலையின் மதிப்பீடு (2023-2024)
5 உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் நடந்து ஐந்தாண்டுகளுக்குப் பின்னரான நிலைமை
6 மதத் தீவிரவாதம் மற்றும் மதத் திணிப்பு
8 மத மாற்றங்கள்
9 வழிபாட்டுத் தலங்களைப் பதிவுசெய்தல்
11 நிலம் மற்றும் வளப் பற்றாக்குறை
14 மதங்களுக்கு உள்ளேயான பதட்டங்கள்

17 அரச செயற்பாட்டாளர்களின் பங்கு மற்றும் ஈடுபாடு
17 தொல்பொருளியல் திணைக்களம்
17 இராணுவம் மற்றும் காவல்துறை
17 அரச உத்தியோகத்தர்களின் பாகுபாடு மற்றும் பக்கச்சார்பு
18 ஏனைய அரச செயற்பாட்டாளர்கள்

19 ஏனைய பொருத்தமான காரணிகள், அவதானிப்புகள் மற்றும் எதிர்காலப் போக்குகள்
19 ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களின் தாக்கம்
20 சமூக ஊடகங்கள், தவறான தகவல்கள் மற்றும் வெறுப்பு பேச்சு
22 மத வெளிப்பாடு மற்றும் நடைமுறை மீதான தொடர்ச்சியான கட்டுப்பாடுகள்
23 பிராந்தியவாதச் சிக்கல்
23 சர்வமதக் குழுக்கள்: அதிகாரம் மற்றும் சுதந்திரம் இன்மை

25 நடவடிக்கைகளுக்கான பரிந்துரைகள்

27 பின்னிணைப்பு - அரை-கட்டமைக்கப்பட்ட நேர்காணல் வழிகாட்டுதல்

# நிறைவேற்றுச் சுருக்கம்

இந்த அறிக்கை மட்டக்களப்பு மாவட்டத்தில், குறிப்பாக 2023-24 ஆம் ஆண்டுகளில் அதிக கவனம் செலுத்தி மதம் அல்லது நம்பிக்கை சுதந்திரத்தின் (FoRB) நிலையை ஆராய்கின்றது. இந்த ஆய்வின் முடிவுகள் சம்பந்தப்பட்ட பங்குதாரர்களுடனான நேர்காணல் மூலம் சேகரிக்கப்பட்டன. இந்தக் கண்டுபிடிப்புகள் மாவட்டத்தின் FoRB நிலையை தற்போது பாதிக்கும் பல முக்கிய கருப்பொருள்கள், வடிவங்கள் மற்றும் அவதானிப்புகளை வெளிப்படுத்துகின்றன. ஒரு மையக் கருப்பொருள் நிலப்பற்றாக்குறை மற்றும் நில உடைமை பற்றிய எச்சரிக்கை ஆகும். இது பெரும்பாலும் இன மத அடிப்படையில் பல்வேறு குழுக்களிடையே மோதலைத் தூண்டுகின்றது அல்லது தூண்டும் சாத்தியத்தைக் கொண்டுள்ளது. தொல்பொருளியல் திணைக்களம், வனப் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் இராணுவம் போன்ற அரச செயற்பாட்டாளர்களால் முன்னெடுக்கப்படுவதாகக் கூறப்படும் நில அபகரிப்பு மற்றும் ஆக்கிரமிப்பு சமூகங்களுக்கு குறிப்பிடத்தக்க அழுத்தங்களை ஏற்படுத்துகின்றன. பாரம்பரியமாக தமிழ் அல்லது முஸ்லிம்கள் வாழும் பிரதேசங்களில் சிங்கள - பௌத்த குடியேற்றவாசிகளின் பிரசன்னம் தொடர்பாக மத சமூகங்கள் மத்தியில் அச்சம் அதிகரித்து வருகின்றது. இது அச்சுறுத்தலாகவும் பல்வேறு குழுக்களுக்கிடையில் முறுகல் நிலைக்கான சாத்தியமான ஆதாரமாகவும் பார்க்கப்படுகின்றது. மேலும், இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட இந்துத்துவா சித்தாந்தத்தைப் பரப்பும் சக்திகளின் பிரசன்னம், மட்டக்களப்பில் உள்ள சைவ சமூகத்தின் மத கலாச்சாரத்திற்கு அச்சுறுத்தலாகக் கருதப்படுகின்றது.

மத மாற்றங்கள், குறிப்பாக கிறிஸ்தவ சமூகங்களால் முன்னெடுக்கப்படும் மத மாற்றங்கள் மற்றும் மதங்களுக்கு இடையிலான திருமணங்கள் மூலம் இஸ்லாம் மதத்திற்கு மாறுவது தொடர்பான குற்றச்சாட்டுகள் தொடர்ந்து வெளிவருகின்றன. இது குறிப்பாக இந்து சமுதாயத்தை பாதித்து வருகின்றது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்குப் பின்னர் தன்னிச்சையான கைதுகள், பிற சமூகங்களிடமிருந்து விரோதத்தைத் தூண்டுவதற்குத் தாக்குதல்களைப் பயன்படுத்தும் சில அரசியல்வாதிகள் மற்றும் பள்ளிவாசல்களைப் பதிவுசெய்து நிர்மாணிப்பதில் உள்ள சவால்கள் என முஸ்லிம் சமூகம் தொடர்ந்து பின்விளைவுகளை எதிர்கொண்டுவருகின்றது. எனினும், முந்தைய ஆண்டுகளை விட முஸ்லிம் சமூகம் மீதான கண்காணிப்பு கடந்த ஆண்டில் குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்து சமூகத்திற்குள், குறிப்பாக இந்துத்துவா சித்தாந்தத்தின் வளர்ந்து வரும் செல்வாக்கு மற்றும் சைவ மரபிலிருந்து மாறுபட்ட நடைமுறைகள் என சிக்கல்கள் நிலவுகின்றன. அதேபோன்று கிறிஸ்தவ சமூகம் மற்றும் அதன் பிரிவுகளுக்குள் மதமாற்றம் தொடர்பான நிலைப்பாடு குறித்தும், முஸ்லிம் குழுக்களிடையே பிரிவுகள் மற்றும் அவர்களின் மத நடைமுறைகளுக்கு இடையிலான வேறுபாடுகள் குறித்தும் மதங்களுக்கு உள்ளேயும் எச்சரிக்கைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. தொல்பொருளியல் திணைக்களம், வனப் பாதுகாப்புத் திணைக்களம், இராணுவம் மற்றும் காவல்துறை உட்பட அரசு செயற்பாட்டாளர்களின் அரசாங்கத்திற்கு ஆதரவளிக்கும் தொடர்ச்சியான ஈடுபாடு மாவட்டத்திலுள்ள தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களுக்குப் பாதகமானது என இந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. மேலும், வேலைவாய்ப்பு மற்றும் உத்தியோகபூர்வ நியமனங்களில் சில இன மதக் குழுக்களுக்கு ஆதரவாகவும், சார்பாகவும் உள்ளூர் அரசு அதிகாரிகளால் பாகுபாடு காட்டப்பட்ட சந்தர்ப்பங்கள் உள்ளன.

ஆய்வு முழுவதும் முன்னிலைப்படுத்தப்பட்ட ஒரு போக்கு, குறிப்பாக இளைஞர்களை ஈர்க்கும் பிராந்தியப் பிரச்சனைகள் மற்றும் சம்பவங்கள் குறித்து கவனத்தை ஈர்ப்பதிலும் அதைத் தீவிரப்படுத்துவதிலும் சமூக ஊடகங்களின் பங்கு ஆகும். இதற்கு நெருக்கமான கண்காணிப்பு தேவைப்படுகின்றது. குறிப்பாக முஸ்லிம்களைக் குறிவைத்து ஆடைகளுக்குத் தடை விதிப்பது போன்ற மத வெளிப்பாட்டிற்கு எதிரான பாகுபாடும் மாவட்டத்தில் எச்சரிக்கைத் தோற்றுவித்துள்ளது. இறுதியாக, வரவிருக்கும் ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களின் தாக்கம், தேர்தல் சுழற்சிகளின் போது இன மத ரீதியாக நடந்த வன்முறைகள் மற்றும் கலவரங்களின் கடந்த கால வடிவங்களைக் கருத்தில் கொண்டு, உன்னிப்பாகக் கண்காணிக்க வேண்டிய ஒரு பிரச்சினையாக முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது.

## முறைமையியல்

இந்த ஆய்வு பண்பறி ஆய்வு முறையைப் பயன்படுத்தி நடத்தப்பட்டது. மாவட்டத்தில் உள்ள பல்வேறு சமூகங்களைப் பாதிக்கும் மதச் சுதந்திரத்தின் நிலை பற்றிய புரிதலை வழங்குவதில் மிகவும் திறமையானவர்கள் இணைக்கப்படுவதை உறுதி செய்வதற்காக கள ஆலோசகர்களுடன் கலந்தாலோசித்து சம்பந்தப்பட்ட பங்குதாரர்கள் அடையாளம் காணப்பட்டனர். இந்த அடையாளம் காணப்பட்ட பங்குதாரர்களுடன் முக்கிய தகவலறிந்த நேர்காணல்கள் நடத்தப்பட்டன. களத் தரவு 2024 ஜூலை மற்றும் செப்டம்பர் மாதங்களுக்கு இடையில் சேகரிக்கப்பட்டது.

இந்த அறிக்கையை உருவாக்க நேர்காணல் செய்யப்பட்ட பங்குதாரர்களின் விவரத்தை பின்வரும் அட்டவணை வழங்குகின்றது.

| பங்குதாரர்களின் வகை | நேர்காணல்களின் எண்ணிக்கை |
|---|---|
| கள ஆலோசகர் | 2 |
| மனித உரிமை ஆர்வலர் | 4 |
| உள்ளூர் அரசியல்வாதி | 1 |
| மதத் தலைவர்கள்<br>*இந்து, கத்தோலிக்கம், கிறிஸ்தவம் மற்றும் முஸ்லிம் சமூகங்களைப் பிரதிபலிக்கும் ஒவ்வொரு பிரதிநிதிகள் | 4 |
| சட்டத்தரணி | 1 |
| மொத்தம் | **12** |

## முறைமையின் வரம்புகள்

ஆய்வு மிகக் குறுகிய காலத்தில் நடத்தப்பட்டது; எனவே தரவு சேகரிப்பு காலம் மற்றும் பங்குதாரர்களின் நேர்காணல்களின் எண்ணிக்கை எதிர்பார்த்த அளவுக்கு இருக்கவில்லை. எனவே, சிறியளவிலான சில சிக்கல்கள் மற்றும் சந்தர்ப்பங்கள் இந்த அறிக்கையில் தற்செயலாக விடுபட்டிருக்கலாம்.

# அறிமுகம்

மட்டக்களப்பு மாவட்டம் வரலாற்று ரீதியாக சர்ச்சைக்குரிய பிரதேசமாக இருந்து வருகின்றது. பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு குழுக்களுக்கிடையில் மோதல்கள் ஏற்பட்டுள்ளன. மாவட்டத்திலுள்ள முக்கிய இனங்களுக்கு இடையிலான பிரச்சினைகளில் ஒன்று, 1990களில் உள்நாட்டுப் போருக்கு மத்தியில் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களுக்கு இடையில் அதிகரித்த முறுகல்கள் ஆகும். அடுத்துவந்த தசாப்தங்களில் பதட்டங்கள் நீடித்தாலும், பரந்த சிங்கள - தமிழ் இன மோதலுடன் ஒப்பிடுகையில் இந்த இனங்களுக்கிடையிலான பிரச்சினை ஒப்பீட்டளவில் குறைவான கவனத்தைப் பெற்றது.[1] அண்மைக் காலங்களில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் இந்த சமூகங்களுக்கு இடையிலான பிரச்சினைகளுக்குப் புத்துயிர் அளித்துள்ளன. மாவட்டத்திலுள்ள அனைத்து மதக் குழுக்களுக்கும் அச்சுறுத்தலாகக் கருதப்படும் இஸ்லாமிய தீவிரவாதம் குறித்த அச்சத்தால், குறிப்பாக காத்தான்குடியிலுள்ள முஸ்லிம் சமூகம் குறிவைக்கப்பட்டது. அதன் பின்னர் மட்டக்களப்பில் உள்ள முஸ்லிம் சமூகம் தீவிர அரச கண்காணிப்பின் இலக்காக மாறியுள்ளது. 2019 ஆம் ஆண்டில் கோவிட்-19 தொடங்கியவுடன், முஸ்லிம்கள் மேலும் ஓரங்கட்டப்பட்டனர். வைரஸை அதிவேகமாகப் பரப்புபவர்கள் என்று களங்கப்படுத்தப்பட்டனர். மேலும் பலவந்தமாகத் தகனம் செய்தல் மற்றும் உடல்கள் அடக்கம் செய்யப்படுவதற்கான உரிமைகள் மறுக்கப்படுவது போன்ற பிரச்சினைகள் எழுந்தன.[2] மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கிறிஸ்தவ சமூகமும் பல ஆண்டுகளாக மத மாற்றம் தொடர்பான குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டுள்ளதுடன், ஏனைய சமூகங்களினால் பாகுபாடுகள் மற்றும் பக்கச்சார்புகளுக்கு உள்ளாக்கப்பட்ட சந்தர்ப்பங்களும் உள்ளன. அதேசமயம், மட்டக்களப்பு பிரதேசத்தில் உள்ள இந்து சமூகமும் தொடர்ந்து பல சவால்களை எதிர்கொள்கின்றது. குறிப்பாக வெளிப்படையான இராணுவமயமாக்கல், காணி இழப்பு மற்றும் பல ஆண்டுகளாகத் தொடரும் கண்காணிப்பை மேலும் தீவிரப்படுத்துதல் போன்ற சவால்களை எதிர்கொள்கின்றது. அண்மைக் காலங்களில் இந்து சமூகத்திற்குச் சொந்தமான தொல்பொருள் தளங்கள் மற்றும் நிலங்கள் மீது குறிப்பிடத்தக்க கவனம் மற்றும் எச்சரிக்கை வெளிப்படுத்தப்படுவதுடன், இப்பகுதியில் இந்துக்களின் மத இருப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளன. தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளைப் பாதுகாப்பதற்காக 2020 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட கிழக்கு மாகாண தொல்பொருளியல் பாரம்பரிய முகாமைத்துவம் தொடர்பான ஜனாதிபதி செயலணியானது, உள்ளடக்கப்படாத பிரதிநிதித்துவத்திற்காக வன்மையாகக் கண்டிக்கப்பட்டது. செயலணி பெரும்பான்மையாக பௌத்த சமூகத்தைச் சேர்ந்த உறுப்பினர்களால் ஆனது. இதனால் இந்து, முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவ மத சமூகங்களுக்குப் பாதகமாகச் செயற்படுகின்றது.

---

1 Arjuna Ranawana. (2020, February 9). Building Race Relations in Uneasy Batticaloa. EconomyNext. https://economynext.com/building-race-relations-in-uneasy-batticaloa-48215/

2 Moinudeen, S. (2021). Is The Cure Worse Than the Disease? Reflections On Covid Governance in Sri Lanka. https://www.cpalanka.org/wp-content/uploads/2021/08/09-Chapter-5.pdf

## தற்போதைய நிலைமையின் கண்ணோட்டம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெளிப்படையான மத வன்முறைகள் குறைவடைந்துள்ள போதிலும், அடிப்படையான பிரச்சினைகள் தொடர்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மதப் பிரச்சினைகள் எவ்வாறு நெருக்கமாகப் பின்னிப்பிணைந்து இனப் பதட்டங்களாகத் தோற்றம் பெறலாம் என்பதற்கு மட்டக்களப்பு எடுத்துக்காட்டாக உள்ளது. மத மோதல்கள் பெரும்பாலும் பரந்த இனப் பூசல்களாக உருவெடுக்கின்றன. இஸ்லாம், கிறிஸ்தவம் அல்லது சைவ மதத்தைப் பின்பற்றும் சமூகங்களுக்கு இடையான பதட்டங்கள் அடிக்கடி தமிழ் - முஸ்லிம் இன மோதல்களாக மறுவடிவமைக்கப்படுகின்றன. 2023 ஆம் ஆண்டில் இடம்பெற்ற மரம் வெட்டும் சம்பவம் இதற்கான ஒரு குறிப்பிடத்தக்க உதாரணம் ஆகும்.[3] மட்டக்களப்பு ஜும்மா பள்ளிவாசலுக்கு முன்பாக பள்ளிவாசல் நிர்வாகத்தினால் பராமரிக்கப்பட்டு வந்த 400 வருடங்கள் பழமையான மரமொன்று கடந்த வருடம் முஸ்லிம் சமூகத்திற்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் இடையில் முரண்பாட்டின் மையமாக மாறியது. பள்ளிவாசல் நிர்வாகம் மறுத்த போதிலும், உள்ளூர் அதிகாரிகள் மரத்தை வெட்டி எரிக்க முடிவு செய்தனர். இதை எதிர்த்து பள்ளிவாசல் நிர்வாகம் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. அரசியல்வாதிகள் மற்றும் சமூக வலைதளங்களில் செல்வாக்கு செலுத்துபவர்களின் தலையீடு காரணமாக இந்தச் சம்பவம் தீவிரம் பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சில அரசியல்வாதிகள் தங்கள் சொந்த சமூக ஊடக தளங்களைப் பயன்படுத்தி சம்பவத்தை நிகழ்நேரத்தில் ஒளிபரப்பினர். சம்பவ இடத்தில் மக்களைத் திரட்டினர். பல்வேறு அரசியல் குழுக்களும் அவர்களின் ஆதரவாளர்களும் சமூக ஊடகங்கள் மூலம் தங்களுக்கான கதைகளை உருவாக்கி பரப்பினார்கள். பதட்டத்தைத் தூண்டி, மரம் வெட்டும் சம்பவத்தை முஸ்லிம் மற்றும் தமிழ் சமூகத்தினரிடையே இனக்கலவரமாக மாற்றினார்கள். மட்டக்களப்பில் உள்ள முஸ்லிம் மீள்குடியேற்ற கிராமமான சிகரம் சேர் ராசிக் பரீத் வித்தியாலயத்தில் கட்டடம் கட்டுவதற்கு எதிராக தமிழ் சமூகம், அரசியல்வாதிகள் மற்றும் தமிழ் சிவில் சமூக உறுப்பினர்கள் தொடர்ச்சியாக போராட்டங்களை நடத்தி வரும் சம்பவம் ஒன்றும் பதிவாகியுள்ளது. மாவட்டத்தில் இவ்வாறான சம்பவங்கள் இனம் அல்லது மதம் சார்ந்ததாகக் காணப்பட்டாலும், அத்தகைய பிரச்சினைகளுக்கு வெளிப்படையாக கருத்து வேறுபாட்டை வெளிப்படுத்துவது அல்லது பழிவாங்குவது பல்வேறு சமூகங்களின் மத சுதந்திரத்தைப் பாதிக்கும்.

மேற்கூறியவற்றின் அடிப்படையில், இந்த அறிக்கையானது மட்டக்களப்பு மாவட்டத்தில் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுக்கு இடையில் பல்வேறு மத சமூகங்கள் எதிர்கொண்ட சவால்களைக் கவனத்தில் கொண்டும், இந்தக் காலப்பகுதியில் இடம்பெற்ற முக்கிய பிரச்சினைகளை முன்னிலைப்படுத்தியும் மத சுதந்திரத்தின் நிலை பற்றிய கண்ணோட்டத்தை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

3 இனவாதத்தின் குறிகாட்டியே மட்டக்களப்பில் தறிக்கப்பட்ட மரம். (2023). https://www.lankanvoice.lk/2023/10/blog-post_17.html

# ஆய்வு கண்டுபிடிப்புகளில் இருந்து FoRB நிலையின் மதிப்பீடு (2023-2024)

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் நடந்து ஐந்தாண்டுகளுக்குப் பின்னரான நிலைமை

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் இடம்பெற்று 5 வருடங்கள் கடந்துள்ள போதும், பாதிக்கப்பட்டவர்களின் மன மற்றும் உடல் ஆரோக்கியத் தேவைகளுக்கு உரிய தீர்வுகள் கிடைக்காமையால் மட்டக்களப்பில் உள்ள கிறிஸ்தவ மற்றும் முஸ்லிம் சமூகங்கள் மத்தியில் ஏமாற்றம் நிலவுகின்றது. சில தனிநபர்கள் நிவாரணம் பெற்றிருந்தாலும், ஒட்டுமொத்த ஆதரவு அமைப்புகள் போதுமானதாக இல்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. தாக்குதல்களைத் தடுக்கத் தவறியதால் முன்னாள் ஜனாதிபதி சிறிசேன மற்றும் ஏனையவர்களைப் பொறுப்புக்கூறுமாறு[4] உச்ச நீதிமன்றம் கூறிய போதிலும் தாக்குதல்களின் உண்மையான குற்றவாளிகள் இன்னும் சரியாக அடையாளம் காணப்படவில்லை என்பதால் முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவ சமூகங்கள் இரண்டும் ஏமாற்றத்தை வெளிப்படுத்தியுள்ளன. திட்டவட்டமான பதில்கள் இல்லாத நிலையில், மாவட்டத்தில் உள்ள கிறிஸ்தவ மற்றும் முஸ்லிம் சமூகத்தினரிடையே தவறான கருத்துக்களும் தொடர்ச்சியான அவநம்பிக்கைகளும் நீடிக்க வாய்ப்புள்ளது என்ற அச்சம் நிலவுகின்றது. மேலும், மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம்கள் பாதுகாப்புப் படையினரால் தொடர்ந்தும் கண்காணிப்படுவதுடன் கைது செய்யப்படுகின்றனர். சமீபத்திய உதாரணம் மட்டக்களப்பில் துப்பாக்கி மற்றும் வெடிமருந்துகளைக் கொண்டு சென்றதாகக் கூறப்படும் மௌலவி ஒருவர் கைது செய்யப்பட்டு தற்போது விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.[5] சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பலர் விடுவிக்கப்பட்டுள்ள போதிலும், புலனாய்வுப் பிரிவினரால் அவர்கள் தொடர்ந்தும் கண்காணிக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகின்றது. அவர்களது வீடுகளுக்கு புலனாய்வுப் பிரிவினர் அடிக்கடி சென்று வருவதாகவும், சில விசாரணைகள் இன்னும் தொடர்ந்து வருவதாகவும் கூறப்படுகின்றது. மேலும் ஆயுதங்களை ஒப்படைத்தவர்களின் வீடுகளைச் சுற்றி இராணுவத்தினர் தொடர்ந்தும் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகக் குறிப்பிடப்படுகின்றது.

முஸ்லிம் சமூகத்திற்குள் அமைதியின்மையை ஏற்படுத்திய அரேபிய இலக்கியங்களை ஒழுங்குபடுத்துவது தொடர்பிலும் தொடர்ந்து எச்சரிக்கைகள் உள்ளன. ஏப்ரல் 2024 முதல் குர்ஆன் மொழிபெயர்ப்பின் 15,000 பிரதிகள் மற்றும் பிற அரேபிய புத்தகங்கள் சுங்கத்தில் தடுத்து வைக்கப்பட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்தப் புத்தகங்களை விடுவிப்பது முஸ்லிம் சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் திணைக்களம் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியிலேயே தங்கியுள்ளது.[6]

---

4 Al Jazeera. (2023, January 12). Sri Lanka ex-leader ordered to compensate Easter bombing victims. Al Jazeera; Al Jazeera. https://www.aljazeera.com/news/2023/1/12/court-rules-sri-lanka-ex-leader-failed-to-stop-easter-attacks#:~:text=Sri%20Lanka

5 Vidivelli. (2024, August 22). துப்பாக்கிகளுடன் கைதான மௌலவி விவகாரம் பின்னணியில் ஆயுத விற்பனை என்று சந்தேகம். Vidivelli.lk. https://www.vidivelli.lk/article/17609

6 Colombo Times. (2024, August 9). Sri Lankan government gives permission to clear the detained copies of holy Quran at Colombo Customs. https://www.colombotimes.net/sri-lankan-government-gives-permission-to-clear-the-detained-copies-of-holy-quran-at-colombo-customs/

### *உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் பற்றிய பிள்ளையான் என்ற சிவநேசதுரை சந்திரகாந்தனின் புத்தகம் தொடர்பான சர்ச்சை*

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக பிள்ளையான் என்றழைக்கப்படும் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23 ஆம் திகதி வெளியிட்ட புத்தகம் தொடர்பில் அண்மையில் சர்ச்சை எழுந்துள்ளது. இந்தப் புத்தகம் இஸ்லாமிய பயங்கரவாதம் பற்றிய விவாதங்களுக்காக விமர்சிக்கப்பட்டதுடன் சமூகங்களுக்கு இடையே பிளவுகளை மீண்டும் ஏற்படுத்தும் முயற்சியாக பலர் இதனைக் கருதுகின்றனர். புத்தகத்தில் உள்ள உள்ளடக்கம் இஸ்லாமிய நம்பிக்கைகளை இழிவுபடுத்துவதாகவும், பிற மதங்களைப் பின்பற்றுபவர்களிடையே இஸ்லாத்தைப் பற்றிய தவறான எண்ணங்களை உருவாக்குவதாகவும் கருதப்படுகின்றது. தாக்குதல்கள் குறித்த புத்தகத்தின் தவறான சித்தரிப்பு தீங்கு விளைவிக்கும் ஒரே மாதிரியான கருத்துக்களை வலுப்படுத்துவதாகவும், குறிப்பாக காத்தான்குடி பிரதேசத்தில் உள்ள முஸ்லிம்களை இலக்கு வைப்பதாகவும் ஆர்வலர்கள் மற்றும் சிவில் சமூக உறுப்பினர்கள் எச்சரிக்கை வெளியிட்டுள்ளனர். வரவிருக்கும் தேர்தல்களில் அரசியல்வாதிகள் தங்கள் பிரச்சாரத்திற்கு இந்தக் கதையைப் பயன்படுத்துவார்கள் என்ற அச்சம் அதிகரித்து வருகின்றது.

## <u>மதத் தீவிரவாதம் மற்றும் மதத் திணிப்பு</u>

### *அதிகரித்து வரும் இந்து தீவிரவாதம்*

இந்தியாவின் ராஷ்ட்ரிய ஸ்வயம் சேவக் சங்கம் (RSS), விஸ்வ ஹிந்து பரிஷத் மற்றும் சிவசேனா போன்ற குழுக்களின் சித்தாந்தங்களின் தாக்கத்தால் இந்து தீவிரவாதம் பரவுவது, குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகரித்து வரும் எச்சரிக்கையாக மாறியுள்ளது. இந்த சித்தாந்தத்தால் செல்வாக்குச் செலுத்தப்பட்ட மற்றும் ஆதரிக்கப்படும் இந்து குழுக்கள், அப்பகுதியில் உள்ள ஏனைய மதக் குழுக்களின் மத சுதந்திரத்தைப் பாதிக்கின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. திருச்செந்தூர் முருகன் கோவிலைச் சுற்றிய நடவடிக்கைகள் அப்பகுதியில் உள்ள சிறுபான்மை மதக் குழுவான கிறிஸ்தவர்களைக் குறிவைத்ததாகக் கூறப்படுகின்றது. 2024 ஜூன் மாதம் திருச்செந்தூர் முருகன் கோவிலுக்குச் செல்லும் வீதியில் உள்ள ஒரு சந்திப்பில் கத்தோலிக்க தேவாலயத்தைச் சேர்ந்தவர்கள் மேரி சிலையை நிறுவ முயன்றபோது பதட்டம் ஏற்பட்டதுடன் இந்து குழுக்களிடம் இருந்து எதிர்ப்பையும் எதிர்கொண்டனர். எதிர்ப்பையும் மீறி இறுதியில் மேரி சிலை நிறுவப்பட்டது. இதற்கு பழிவாங்கும் வகையில் புத்தர் மற்றும் பிள்ளையார் சிலைகள் அதே இடத்தில் வைக்கப்பட்டு பின்னர் அகற்றப்பட்டன. இந்தச் சிலைகளை வைத்தமை கத்தோலிக்கச் சமூகத்தைத் தூண்டும் முயற்சி என்று குறிப்பிடப்படுகின்றது.

### *கிழக்கில் சிங்கள பௌத்தத் திணிப்பு*

சிங்கள - பௌத்தத் தீவிரவாதத்தைத் திணிப்பதாகக் கருதப்படும் நில அபகரிப்பு தொடர்பான பிரச்சினையும் அதிகரித்து வருகின்றது. இந்து மற்றும் முஸ்லிம் சமூகங்களை இழிவுபடுத்தும் வகையில் பௌத்த பிக்குகள் வெளியிடும் கருத்துக்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படாமை தொடர்பில் எச்சரிக்கை வெளியிடப்பட்டுள்ளது. பொதுபள சேனா மற்றும்

ராவண பளய போன்ற பௌத்த தீவிரவாதப் போக்கு கொண்ட அமைப்புகளுக்கு எதிராக சரியான நடவடிக்கை எடுக்கப்படாதது எச்சரிக்கையளிக்கின்றது. இந்தக் குழுக்கள் இன்றும் கூட முஸ்லிம்களுக்கு எதிரான பொய்யான தகவல்களைப் பரப்பி வருவதாக நம்பப்படுகின்றது. உதாரணமாக, 2023 ஆம் ஆண்டு அம்பிட்டிய சுமண ரதன தேரர் தமிழர்களுக்கு எதிரான வெறுப்புப் பேச்சுக்களை பகிரங்கமாக வெளியிட்டார்.[7] இது குறித்து கூறியும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காதது, அப்பகுதி மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. கூரகலவில் இஸ்லாம் குறித்து அவதூறான கருத்துக்களை வெளியிட்டமைக்காக களகொட அத்தே ஞானசார தேரருக்கு 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நான்காண்டு கடுழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. எனினும் ஜுலை 2024 இல் மேன்முறையீட்டு நீதிமன்றம் அவருக்கு பிணை வழங்கியது. முன்னாள் பொதுபள சேனா தலைவர் அண்மையில் விடுவிக்கப்பட்டமை எதிர்காலத்திற்கான சாத்தியமான எச்சரிக்கைகளை எழுப்புகின்றது.[8]

கிழக்கு மாகாணத்தில் அத்துமீறல் மற்றும் கட்டாயக் குடியேற்றம் போன்ற வடிவங்களில் சிங்கள பௌத்தம் திணிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. திருகோணமலையில் பதிவான இவ்வாறான சம்பவம், இந்த அத்துமீறல்கள் பிராந்தியத்தில் உள்ள தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களைக் குறிவைத்து ஓரங்கட்டுவதற்கான நேரடி முயற்சியாகக் காணப்படுவதுடன், மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளவர்களையும் எச்சரிக்கையடையச் செய்துள்ளது. திருகோணமலை குச்சவெளி பிரதேசத்தில் பாரம்பரியமாக முஸ்லிம்களுக்குச் சொந்தமான காணிகளில் 2022 ஆம் ஆண்டு முதல் தெற்கில் ஹம்பாந்தோட்டை மற்றும் வீரகெட்டிய பிரதேசங்களில் இருந்து வந்த சிங்கள பௌத்தர்கள் குடியேற்றப்பட்டு வருவதாகவும் கிராமங்களின் பெயர்களும் படிப்படியாக மாற்றப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இந்த நடவடிக்கைகளுக்குத் தீவிரமாக ஆதரவளிக்கும் பொதுபள சேனா தலைவர் ஞானசார தேரர் போன்ற தீவிரவாதப் பிக்குகளால் இந்தக் குடியேற்றங்களுக்கு ஆதரவு அளிக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது. மேலும், போருக்குப் பிந்தைய காலத்தில் பல்வேறு இடங்களில் சுமார் 32 புதிய புத்தர் சிலைகள் அல்லது விகாரைகள் இந்தப் பகுதியில் நிறுவப்பட்டுள்ளன. அப்பகுதியில் உள்ள ஏனைய மதக் குழுக்களின் அனுமதி அல்லது ஒப்புதல் இல்லாமல் மேற்கொள்ளப்பட்டதுடன் இது பௌத்த மத நம்பிக்கைகளைத் திணிப்பதாகப் பார்க்கப்படுகின்றது.

இந்து தீவிரவாதத்தை ஆதரிக்கும் குழுக்களுக்கும், இப்பகுதியில் பௌத்தத்தை திணிப்பவர்களுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருப்பதையும் இது அவதானிக்கின்றது. இது மதங்களுக்கு இடையிலான ஒத்துழைப்பைக் குறிக்கின்றது. இரண்டு குழுக்களுக்கும் இடையிலான இந்த ஒத்துழைப்பிற்கு "இந்து பௌத்த சங்கம்" போன்ற அமைப்பு உதாரணமாக உள்ளது. அந்தந்த மதத்தவர்களின் நிகழ்ச்சி நிரல்களை முன்னெடுத்துச் செல்ல ஒன்றாகப் பணியாற்றுகின்றனர். மேலும், சிங்கள - பௌத்த பாரம்பரியத்தைப் பாதுகாப்பதில் இந்திய

---

7 TNA questions IGP over Ampitiya Thera's controversial statement - Newswire. (2023, October 27). Newswire. https://www.newswire.lk/2023/10/27/tna-questions-igp-over-ampitiya-theras-controversial-statement/

8 Colombo HC orders release of Ven. Gnanasara Thero on bail. (2024). Adaderana.lk. https://www.adaderana.lk/news/100688/colombo-hc-orders-release-of-ven-gnanasara-thero-on-bail

அரசாங்கத்தின் தலையீடு குறித்து எச்சரிக்கை ஏற்பட்டுள்ளதுடன் இது குறித்து அதிக கவனம் தேவைப்படுகின்றது. 2023 ஆம் ஆண்டில் புத்தர் சிலைகளை நிறுவுவது உட்பட நீண்டகால பௌத்தத் தொடர்புகளை வலுப்படுத்துவதற்கு இந்திய அரசியல்வாதி ஒருவர் இலங்கைக்கு 15 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதாக அறிவித்திருந்தார். அவ்வாறான தொடர்புகள் மட்டக்களப்பு போன்ற மாவட்டங்களில் ஏற்படுத்தக்கூடிய தாக்கங்கள் குறித்த எச்சரிக்கைகள் எழுகின்றன.[9]

## மத மாற்றங்கள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் மத மாற்றம் தொடர்ந்தும் ஒரு சர்ச்சைக்குரிய விடயமாக இருந்து வருகின்றது. ஒருவருடைய நம்பிக்கையை வெளிப்படுத்துவதற்கான அரசியலமைப்பு உரிமை இருந்தபோதிலும், மத மாற்றம் பற்றிய பொதுவான கருத்து நேர்மறையை விட எதிர்மறையாகவே உள்ளது. மட்டக்களப்பில் உள்ள இந்து மக்கள் கிறிஸ்தவம் மற்றும் இஸ்லாம் மீது மத மாற்றம் தொடர்பான குற்றச்சாட்டுக்களை அடிக்கடி முன்வைக்கின்றனர். சில பதிவு செய்யப்படாத சிறுபான்மை மதக் குழுக்கள் தங்கள் உறுப்பினர் எண்ணிக்கையை அதிகரித்து மாவட்டத்தில் இருப்பை நிலைநிறுத்தும் நோக்கில் மதமாற்ற முயற்சிகளில் ஈடுபட்டு வருவதாகவும் ஒரு நேர்காணலின் போது குறிப்பிடப்பட்டது.

### *மத மாற்றத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்*

மத மாற்றத்தின் தற்போதைய போக்கிற்கு பல காரணிகள் பங்களிக்கின்றன. தொடரும் பொருளாதார நெருக்கடி முக்கிய பங்கு வகிக்கின்றது. ஏனைய பங்களிக்கும் காரணிகளில் பெண்கள் எதிர்கொள்ளும் பாதிப்பு, சாதியம் மற்றும் ஒருவரின் சொந்த மதத்தைப் பற்றிய அறிவு இல்லாமை ஆகியவை அடங்கும். "இயேசுவின் பெயரால் வறுமையிலிருந்து விடுதலை" என்ற பதாகையின் கீழ் உள்ள திட்டங்கள் கிறிஸ்தவ மதத்திற்கு மாறும் ஏழை சமூகங்களுக்கு நிதி மற்றும் வளங்களை வழங்குவதை அவதானிக்க முடிகின்றது. முஸ்லிம் நகரங்களுக்கு அருகிலுள்ள தனிமைப்படுத்தப்பட்ட, ஏழ்மையான தமிழ் கிராமங்களில் இஸ்லாத்திற்கு மதம் மாறுவது அதிகமாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இப்பிரதேசங்களில் பாதிக்கப்படக்கூடிய நபர்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்கி இஸ்லாமிய மதமாற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மத மாற்ற நடைமுறைகள் தன்னார்வமாகவும் பலவந்தமாகவும் இடம்பெறுவதாகக் கூறப்படுகின்றது. இது குறிப்பாக மட்டக்களப்பில் உள்ள சைவ மதத் தலைவர்களிடையே சர்ச்சைக்குரிய விடயமாக மாறியுள்ளது. இந்தத் தலைவர்கள் மத மாற்றங்களை எதிர்ப்பதாகக் கூறப்படுகின்றது. குறிப்பாக பொருளாதாரத்தில் பின்தங்கிய சைவ நபர்களுக்குப் பொருளுதவி வழங்குவதாக் கூறி பல்வேறு குழுக்களால் குறிவைக்கப்படுவதாக அவர்கள் கருதுகின்றனர். பிரதான தேவாலயங்கள் அனுமதியின்றி மத மாற்றத்தில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டி இந்து மதத் தலைவர்கள் மனுக்கள் மற்றும் நீதிமன்ற வழக்குகளைத் தாக்கல் செய்த சம்பவங்கள்

---

9 India allocates USD 15 mn grant to Sri Lanka to bolster long-standing Buddhist connections. (2023, November 3). The Economic Times; Economic Times. https://m.economictimes.com/news/india/india-allocates-usd-15-mn-grant-to-sri-lanka-to-bolster-long-standing-buddhist-connections/articleshow/104944465.cms

உள்ளன. மேலும், அண்மைக் காலமாக மாவட்டத்தில் அதிகரித்து வரும் தற்கொலை மற்றும் போதைப்பொருள் பாவனை போன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காண, சில மதக் குழுக்கள் மருத்துவம் மற்றும் மத வழிபாடுகளைக் கருவிகளாகப் பயன்படுத்துவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

*திருமணம் மூலமான மத மாற்றம்*

தமிழ் - கிறிஸ்தவர்கள் மற்றும் சைவ சமயத்தவர்களை, குறிப்பாக பெண்களை காதல் திருமணங்கள் மூலம் இஸ்லாம் மதத்திற்கு இஸ்லாமியர்கள் மாற்றும் நடைமுறை குறித்து தொடர்ந்து எச்சரிக்கைகள் எழுப்பப்பட்டுள்ளன. முஸ்லிம்களைத் திருமணம் செய்வதற்காக சிலர் மதம் மாறுவதைத் தேர்வு செய்வதுடன், இஸ்லாத்திற்கு மாறுபவர்கள் பொதுவாக விரும்பியே அவ்வாறு செய்வதாக ஒரு மாற்றுக் கருத்தும் உள்ளது. முஸ்லிம் அமைப்புகள் பொதுவாக ஏனைய மத சமூகங்களிடையே தீவிரமாக மத மாற்றம் செய்வதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

மத மாற்ற முயற்சிகளில் பெரும்பாலும் முதலில் பெண்களை அணுகும் ஒரு முறை உள்ளது அவதானிக்கப்படுகின்றது. குடும்பங்களைக் கவனித்துக்கொள்வதற்கான அவர்களின் பொறுப்பு காரணமாக, பெண்கள் அதிக சுதந்திரம் அல்லது வளங்களை அணுகுவதற்கான வழிமுறையாக மதமாற்றத்திற்கு ஈர்க்கப்படுவதாகக் கூறப்படுகின்றது. மேலும், சில பெண்கள் தங்கள் புதிய மத சமூகங்களில் ஆலோசனை அல்லது உளவியல் ஆதரவுக்கான வழியை மதமாற்றத்தின் மூலம் கண்டறிந்துள்ளனர் - இது அவர்களின் முந்தைய மத சமூகங்களுக்குள் கிடைக்காமல் போகலாம். உதாரணமாக, கத்தோலிக்க மற்றும் பிரதான தேவாலயங்கள் பெரும்பாலும் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலைகளில் பெண்களுக்கு உளவியல் ஆதரவை வழங்குகின்றன. இது நிவாரணமாகக் கருதப்படுவதுடன் மதத்தை நோக்கி இழுக்கும் காரணியாகவும் செயல்படுகின்றது.

## வழிபாட்டுத் தலங்களைப் பதிவு செய்தல்

இலங்கை சட்டத்தின் கீழ் தற்போது மத வழிபாட்டுத் தலங்களைப் பதிவு செய்ய வேண்டிய கட்டாயம் இல்லை. எனினும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களைத் தொடர்ந்தும், பதிவு செய்யப்படாத மத நிறுவனங்கள் மூலம் தீவிரவாதம் பரவுவது குறித்த அதிகரித்து வரும் எச்சரிக்கைகளைத் தொடர்ந்தும் இவ்வாறான இடங்களைக் கட்டாயமாகப் பதிவு செய்வதற்கான விதிமுறைகளை அறிமுகப்படுத்த அரசாங்கம் முயற்சித்துள்ளது. புதிய வழிபாட்டுத் தலங்களை நிர்மாணிப்பதற்கான அனுமதியை வழங்குவதைத் தாமதிக்குமாறு பிரதேச செயலகங்களுக்கு அரசாங்கம் முதலில் அறிவுறுத்தியதாக ஒரு நேர்காணலில் குறிப்பிடப்பட்டது. இதுபோன்ற கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டாலும், கடுமையான விதிமுறைகள் இன்னும் அமலில் உள்ளன. முன்பைப் போலன்றி, தனிநபர்கள் தாங்கள் விரும்பும் இடங்களில் வழிபாட்டுத் தலங்களைச் சுதந்திரமாகக் கட்ட முடியாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசாங்க அதிகாரிகள் தற்போது ஏராளமான ஆவணங்களைக் கேட்பதுடன் அனுமதி வழங்குவதற்கு முன்பு பல கேள்விகளைக் கேட்கின்றனர்.

புத்த சாசன அமைச்சினால் வெளியிடப்பட்ட 2022 சுற்றறிக்கையில், புதிய மத நிலையங்கள், வழிபாட்டுத் தலங்கள், பிரார்த்தனை மையங்கள் அல்லது கூட்டு வழிபாட்டில் ஈடுபடும் நிறுவனங்கள் பதிவு செய்யப்பட வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. இந்தச் சுற்றறிக்கை புதிய வழிபாட்டுத் தலங்களுக்கு மட்டுமே பொருந்தும். எனினும் குறிப்பாக மத சிறுபான்மையினரைக் குறிவைத்து ஏற்கனவே உள்ள வழிபாட்டுத் தலங்களுக்கும் இந்த விதிமுறைகளை உள்ளூர் அதிகாரிகள் தங்கள் விருப்பப்படி பயன்படுத்துகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. விதிமுறைகள் மற்றும் சட்டங்கள் பற்றிய தெளிவான வழிகாட்டுதல் இல்லாததுடன் ஏற்கனவே உள்ள தெளிவற்ற தன்மையை அதிகாரிகள் எவ்வாறு விளங்கிக்கொள்கின்றார்கள் மற்றும் தங்கள் விருப்பப்படி அதை எவ்வாறு செயல்படுத்துகிறார்கள் என்பது உள்ளூர் மட்டத்தில் பல்வேறு சிக்கல்களுக்கு வழிவகுத்துள்ளது.

சட்டத்தின் பிரகாரம் பௌத்த, இந்து மற்றும் முஸ்லிம் உட்பட அனைத்து மத நிறுவனங்களும் பதிவு செய்யப்பட வேண்டும் என மார்ச் 2024 இல் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக வலியுறுத்தினார். இது யெகோவாவின் சாட்சிகள் மற்றும் மார்மன்ஸ் போன்ற பிற குழுக்களுக்கும் நீட்டிக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டார். பதிவு செய்யப்படாத மத நிறுவனங்கள் மீது சோதனை நடத்தப்படும் என்றும் அவர் கூறினார்.[10]

## *மத சிறுபான்மையினர் எதிர்கொள்ளும் சவால்கள்*

கட்டாயப் பதிவுடன் தொடர்புடைய சிக்கல்கள் மற்றும் சட்டத் தேவைகளைக் கருத்தில் கொள்ளும்போது சிறுபான்மை மதக் குழுக்கள் எதிர்காலத்தில் சாத்தியமான சட்டச் சிக்கல்களால் பாதிக்கப்படலாம். உதாரணமாக, பதிவு செய்வதற்கு ஆவணங்கள் கோரப்பட்டால் யுத்தத்தின்போது காணி உறுதிகள் போன்ற முக்கியமான ஆவணங்கள் அழிந்து போனதால் பல சிறுபான்மை மதக் குழுக்கள் சட்டத்துடன் இணங்குவதில் சிக்கல் ஏற்படலாம். ஆரையம்பதி கிராமத்தில் 54 சைவக் கோயில்கள் உள்ளன. அவற்றில் சில பதிவு செய்யப்படாதவை என்பது குறிப்பிடத்தக்கது. பதிவு செய்யப்படாததால் எதிர்காலத்தில் இந்தக் கோயில்களின் இருப்புக்கு சட்டரீதியான சவால்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்ற அச்சம் நிலவுகின்றது.

## *பள்ளிவாசல்களுக்கான பதிவு மற்றும் ஒழுங்குவிதி மாற்றங்கள்*

ஆகஸ்ட் 2024 நிலவரப்படி முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் மற்றும் வக்ஃப் சபை புதிய பள்ளிவாசல்களின் பதிவுகளை மீண்டும் தொடங்குவதாக அறிவித்துள்ளன. இது புதிய முஸ்லிம் நிறுவனங்களின் பதிவுகளை ஒழுங்குபடுத்துவதற்கான முயற்சிகளைக் குறிக்கின்றது. வக்ஃப் சட்டத்தின் கீழ் அனைத்து பள்ளிவாசல்களும் முஸ்லிம் கலாசார திணைக்களத்தில் உள்ள வக்ஃப் சபையில் பதிவு செய்யப்பட வேண்டும். இந்தப் பதிவு

10 Alahakone, N. (2024, March 11). Sri Lanka planning to raid unregistered places of worship. EconomyNext. https://economynext.com/sri-lanka-planning-to-raid-unregistered-places-of-worship-154081/

தொடர்பான சிக்கல்களை வக்ஃப் தீர்ப்பாயமும் கையாளுகின்றது.[11] கடந்த 2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற தாக்குதலின் பின்னர் காத்தான்குடியில் மூடப்பட்ட இரண்டு பள்ளிவாசல்களை மீண்டும் திறக்க அனுமதி வழங்கப்படுவதாக முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் அறிவித்துள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தேசிய தவ்ஹீத் ஜமாத் பள்ளிவாசல் மற்றும் தாருல் அதர் பள்ளிவாசல் ஆகிய இந்தப் பள்ளிவாசல்கள் விரைவில் மக்கள் பாவனைக்கு ஒப்படைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## நிலம் மற்றும் வளப் பற்றாக்குறை

பல்வேறு அரச அதிகாரிகளின் காணி அபகரிப்பு காரணமாக முஸ்லிம் மற்றும் தமிழ் சமூகங்கள் காணி ஒதுக்கீடு மற்றும் அவர்களது காணி உரிமைகள் தொடர்பில் அதிக எச்சரிக்கை கொண்டுள்ளனர். இது இரு சமூகத்தினரிடையே நிலம் குறைவாகக் கிடைப்பது, நில பாதுகாப்பு குறித்த எச்சரிக்கைகளைத் தீவிரப்படுத்துவது மற்றும் சமூகங்களுக்கு இடையே பதட்டங்களை உருவாக்குவது பற்றிய அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இந்த வழக்குகள் மதம் அல்லது நம்பிக்கை சுதந்திரத்தை மீறுவது அல்லது பாதிப்பதுடன் நேரடியாகத் தொடர்புடையவை அல்ல என்றாலும், நிலப்பற்றாக்குறை பல்வேறு தரப்பினரால் மதக் குழுக்களை குறிவைக்கவோ அல்லது மதங்களுக்கு இடையேயான மோதல்களுக்கு வழிவகுக்கவோ பயன்படுத்தப்படாமல் இருப்பதை உறுதிசெய்ய இந்தச் சிக்கல்களை முன்னிலைப்படுத்துவது முக்கியம் என்பது குறிப்பிடத்தக்கது. நிலப்பற்றாக்குறை மற்றும் உரிமைச் சிக்கல்களைச் சுற்றியுள்ள சவால்களை விளக்கும் ஒரு சம்பவம் மார்ச் 2024 இல் இடம்பெற்றது. காத்தான்குடி ஆரையம்பதி கிராமத்தைச் சேர்ந்த முஸ்லிம் நபருக்கு நிலத்தை விற்றதன் காரணமாக திருநீலகண்டப் பிள்ளையார் கோயில் மற்றும் மாரியம்மன் கோயில் நிர்வாகங்கள் ஒரு குடும்பத்தை வழிபாடு மற்றும் கோயில் நடவடிக்கைகளில் பங்கேற்பதிலிருந்து விலக்க முடிவு செய்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

### *முஸ்லிம்களுக்கு மட்டக்களப்பில் காணி பற்றாக்குறை*

முஸ்லிம்கள் செறிந்து வாழும் பிரதேசமான காத்தான்குடி கடுமையான காணி பற்றாக்குறையை அனுபவித்து வருகின்றது. காத்தான்குடி பிரதேச செயலகத்திடம் இருந்து 2,500 குடும்பங்கள் ஏற்கனவே காணி ஒதுக்கீட்டு கோரிக்கைகளை முன்வைத்துள்ள போதிலும், இந்தக் கோரிக்கைகள் இதுவரை கவனத்தில் கொள்ளப்படவில்லை. மத அடிப்படையிலான பாகுபாடு காரணமாகவே இந்தத் தாமதங்கள் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. பிரதேச செயலகம் மற்றும் ஏனைய உள்ளூர் மட்டத்திலுள்ள நிர்வாக அலுவலகங்களில் பணிபுரியும் தமிழ் சமூகத்தைச் சேர்ந்த அரச உத்தியோகத்தர்கள் முஸ்லிம் சமூகத்தின் காணி கோரிக்கைகளுக்கு ஆதரவளிப்பதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி சிவில் நிறுவனங்கள் மற்றும் தொழில் வல்லுநர்கள் மன்றம் ஜனாதிபதிக்கு கடிதமொன்றைச் சமர்ப்பித்து, இந்தக் காணி பிரச்சினைகளை முன்னிலைப்படுத்தியதுடன், மட்டக்களப்பு

11 https://www.facebook.com/DMRCASriLanka/posts/pfbid0NRTGQz9iEJWbnPY8CKZFaWgdtq6jdZA7uBNWXaMhD8aD5fQBiD-BRhYzFw6hy5a4Hl

சனத்தொகையில் 27% முஸ்லிம்கள் காணப்படுகின்ற போதிலும் மாவட்டத்தின் மொத்தக் காணியில் அவர்களுக்கு 1.46% மாத்திரமே ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்திருந்தது.

தொல்பொருளியல் திணைக்களத்தின் நடவடிக்கைகளால் மட்டக்களப்பில் நிலப்பற்றாக்குறை பிரச்சினை மேலும் சிக்கலாகி உள்ளது. வாகரையிலும் கோறளை மேற்குப் பகுதியிலும் சிங்களக் குடியேற்றங்களை அமைக்கும் முயற்சிகள் மாவட்டத்தில் இன - மத பதட்டங்களுக்கு வழிவகுத்துள்ளன. மேலும் காத்தான்குடி தெற்கு எல்லை, சிஹரம், பாலமுனை, கர்பலா போன்ற பிரதேசங்களில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான காணிகளில் தமிழர்கள் அத்துமீறி ஆக்கிரமிப்பதாகவும் இந்தப் பிரதேசங்களில் அவர்கள் குடியேறுவதற்கு இடையூறாக இருப்பதாகவும் முஸ்லிம் சமூகங்கள் குற்றஞ்சாட்டுகின்றன.
மட்டக்களப்பிலுள்ள அரசியல்வாதிகள் காணி அபகரிப்பில் ஈடுபடுவதாகவும் ஒரு கருத்து நிலவுகின்றது. சிஹரம் கிராமத்தில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான நிலத்தின் ஒரு பகுதியை தொல்பொருளியல் திணைக்களம் 2019 ஆம் ஆண்டில் கையகப்படுத்தியதாகக் கூறப்படுகின்றது. உள்ளூர்வாசிகள் நுழைவதைத் தடுத்து இந்த நிலத்திற்கான அணுகலை திணைக்களம் தடை செய்துள்ளது. இந்த நிலத்தில் தொல்பொருட்கள் எதுவும் இல்லை என்று கூறும் பிரதேசவாசிகள், கையகப்படுத்துவதை நியாயப்படுத்தும் வகையில் திணைக்களம் வேண்டுமென்றே சில தொல்பொருட்களைப் புதைத்துள்ளதாகக் குற்றம் சாட்டுகின்றனர்.

### *மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரை மோதல்*

மட்டக்களப்பின் காணி முரண்பாட்டின் மற்றுமொரு முக்கிய உதாரணம் மயிலத்தமடு மேய்ச்சல் தரை பிரச்சினை. இந்தப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு கோரி ஏப்ரல் 2024 நிலவரப்படி தமிழ் விவசாயிகள் 200 நாட்களுக்கும் மேலாக போராட்டம் நடத்தி வருகின்றனர்.[12] மட்டக்களப்பு மாவட்டத்தில் சிங்களக் குடியேற்றங்களை நிறுவி அப்பகுதியை சிங்கள - பௌத்தமயமாக்கல் மூலம் தமிழ் மக்களின் விகிதாச்சாரத்தைக் குறைக்கும் பரந்த முயற்சியின் ஒரு பகுதியாக இந்த மோதல் கருதப்படுகின்றது. இந்த மேய்ச்சல் நிலத்திற்கு மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை உரிமை கோரி சிங்கள விவசாயிகளுக்கு விவசாயத் தேவைகளுக்காக ஒதுக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் பௌத்த பிக்கு ஒருவரின் ஆதரவுடன் சட்டவிரோதமாகக் குடியேறியுள்ள இந்த விவசாயிகள், காணிகளை மீட்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள தமிழ் கால்நடை பண்ணையாளர்களுடன் தற்போது முரண்பட்டுள்ளனர்.

இந்த விடயத்தில் தமிழ் சமூகத்திற்கு பாதகமாகவே அரசாங்க நடவடிக்கைகள் தொடர்கின்றன. 2023 ஆம் ஆண்டு மயிலத்தமடுவில் இந்த விடயம் தொடர்பில் கவன ஈர்ப்புக்கு முயன்ற மதத் தலைவர்கள் மற்றும் ஊடகவியலாளர்களை பௌத்த பிக்கு ஒருவரும் சிங்கள மக்கள் குழுவும் தடுத்து வைத்தனர். சம்பவம் தொடர்பில் கரடியனாறு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தபோது, பொலிஸ் உத்தியோகத்தர்கள் பௌத்த பிக்குவுக்கு எதிராக சட்ட

12 Tamil Guardian. (2024, April 1). Tamil livestock farmers mark 200 days of protest against Sinhalese settler violence in Batticaloa. https://www.tamilguardian.com/content/tamil-livestock-farmers-mark-200-days-protest-against-sinhalese-settler-violence-batticaloa

நடவடிக்கை எடுக்காமல் அவரை வணங்கியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.[13]

### *சைவ கோயில் நிலங்கள் ஆக்கிரமிப்பு*

பௌத்த பிக்குகளின் ஆதரவுடன் தொல்பொருளியல் திணைக்களத்தின் காணி ஆக்கிரமிப்புகள் 2020 ஆம் ஆண்டில் குசனார் குமரன் ஆலயம் மற்றும் சித்தாண்டி முருகன் ஆலயம்[14] மற்றும் 2018 ஆம் ஆண்டில் வேலோடு மலை கோவில் உட்பட 20க்கும் மேற்பட்ட சைவ ஆலயங்களைக் குறிவைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இவற்றில் சில ஆக்கிரமிப்புகள் பௌத்தர்களின் முதன்மை ஆதரவுடன் மேற்கொள்ளப்படுவதாகவும் தமிழர்களுக்கு எதிரான நில அபகரிப்பில் சில முஸ்லிம்களும் மறைமுக ஆதரவு வழங்குவதாகவும் குற்றஞ்சாட்டப்படுகின்றது. சில தமிழ் அரசியல்வாதிகள் இந்தக் காணி ஆக்கிரமிப்புகளுக்கு போதிய தீர்வு வழங்காமல் மௌனமாக அரசாங்கத்திற்கு ஆதரவளிப்பதாகச் சந்தேகம் எழுவதாகவும் ஒரு நேர்காணலில் குறிப்பிடப்பட்டது. மேலும், இந்துக்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளில் புத்தர் சிலைகள் நிறுவப்படுவது பலரையும் எச்சரிக்கை கொள்ளச் செய்துள்ளது.

### *வாகரையில் முன்மொழியப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களின் தாக்கம்*

சமூகங்களுக்கு காணி இல்லாமை தொடர்பிலான சிக்கல்களுக்கு மத்தியில், அபிவிருத்தி என்ற போர்வையில் வாகரை பிரதேச செயலகத்தின் காணி வளங்கள் மீன் வளர்ப்பு மற்றும் இல்மனைட் அகழ்வு போன்ற செயற்பாடுகளுக்காக சர்வதேச நிறுவனங்களுக்கு விற்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.[15] தமிழ் அரசியல்வாதிகள் தமது சமூகங்களைப் பாதிக்கும் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்காமை குறித்தும் ஏமாற்றம் காணப்படுகின்றது.

### *பூநொச்சிமுனையில் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களுக்கு இடையே பதட்டத்தை உருவாக்க முயற்சி*

அண்மைக்காலமாக காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பூநொச்சிமுனை பகுதியில் தமிழ் மற்றும் முஸ்லிம் மீனவர்களுக்கு இடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது. ஜூன் 2024 இல் பூநொச்சிமுனை கடற்கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மீன்பிடி படகு தீ வைத்து எரிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக இரண்டு தமிழ் மீனவர்களை சந்தேகத்தின் பேரில் காவல்துறையினர் கைது செய்தனர். இச்சம்பவம் அப்பகுதியில் உள்ள தமிழ் மற்றும் முஸ்லிம் மீனவர்களிடையே முறுகல் நிலையை உருவாக்கியது. அதே நேரம்

---

13 **மும்மத தலைவர்கள் சிறைப்பிடிப்பு: மட்டக்களப்பு எல்லையிலிருந்து திரும்ப முடியாத நிலையில் தமிழர்கள்..! - தமிழ்வின்.** (2023). Tamilwin. https://tamilwin.com/article/imprisonment-religious-leaders-in-batticaloa-1692733099

14 Sinhala Archaeology officials attach GPS tracking to “heritage” stones in East. (2020, July 26). Tamilnet.com. https://www.tamilnet.com/art.html?catid=13&artid=39900

15 https://www.facebook.com/watch/?mibextid=TrneLp&v=1395925874437486&rdid=W9EK3jhuXhEhByWi

சில முஸ்லிம் மீனவர்கள் தங்கள் வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதற்காகவும், தமிழ் - முஸ்லிம் நல்லிணக்கத்தைச் சீர்குலைக்க முயற்சிக்கும் அந்நிய சக்திகளுக்கு எதிராகவும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.[16] ஜூலை 2024 இல் அதே கிராமத்தில் உள்ள ஒரு வீட்டில் வெடிப்புச் சம்பவம் நிகழ்ந்தது.[17] சில நாட்களுக்குப் பிறகு அந்த வீட்டிற்கு அருகில் ஒரு கைக்குண்டு கண்டுபிடிக்கப்பட்டதுடன் அது ஊடகங்களின் கவனத்தை ஈர்த்தது.[18]

## மதங்களுக்கு உள்ளேயான பதட்டங்கள்

### *இந்து குழுக்களுக்கு இடையிலான பதட்டங்கள்*

இலங்கையில் பல நூற்றாண்டுகளாகக் கடைப்பிடிக்கப்பட்டு வரும் இந்து மதத்தின் ஒரு பிரிவான சைவம், இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட இந்துத்துவ சித்தாந்தத்தின் திணிப்பு மற்றும் செல்வாக்கு காரணமாக அழிவை எதிர்கொள்வதாகக் கூறப்படுகின்றது. இந்தச் சித்தாந்தம் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில், குறிப்பாக சைவ மக்களிடையே இந்திய அரசாங்கத்தின் ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதை நோக்கமாகக் கொண்டதாகக் கூறப்படுகின்றது. இந்தக் கலாசார மற்றும் மத ஊடுருவல் சைவ மற்றும் தமிழ் அடையாளத்தைப் பாதுகாப்பதில் குறிப்பிடத்தக்க அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளதாகக் கருதப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள திருச்செந்தூர் முருகன் கோவிலின் அனுசரணையின் கீழ் ராஷ்ட்ரிய ஸ்வயம் சேவக் சங்கம் (RSS), சிவசேனா மற்றும் விஷ்வ ஹிந்து பரிஷத் போன்ற முக்கிய இந்திய அமைப்புகள் தீவிரமாக இயங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்தக் குழுக்கள் தமிழ் ஓதுதலை மையமாக வைத்து பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்துவது குறிப்பிடத்தக்கது. இது வெளித்தோற்றத்தில் தீங்கற்றதாக இருந்தாலும், தமிழ் மக்களிடையே பிரிவினையை ஏற்படுத்துவதற்கும் சமஸ்கிருத ஓதுதல் பாரம்பரியத்தைக் குறைத்து மதிப்பிடும் முயற்சியாகவும் கருதப்படுகின்றது. அவர்கள் பாரம்பரிய கும்பாபிஷேக நிகழ்ச்சியை மங்களகரமற்ற நாளில் ஏற்பாடு செய்ததாகவும் கூறப்படுகின்றது. இது நாட்டிலுள்ள பாரம்பரிய சைவ வழிபாட்டு முறைகளை குறைமதிப்பிற்கு உட்படுத்துவதாகவும் பிற வழிபாட்டு முறைகளை ஊக்குவிக்கும் முயற்சியாகவும் விளங்கிக்கொள்ளப்படுகின்றது. இந்துத்துவ சித்தாந்தத்தின் நிழலின் கீழ் சைவ சமயத்தின் வீழ்ச்சி வெறும் மத ரீதியான அக்கறை மட்டுமல்ல, பண்பாடு சார்ந்ததும் ஆகும். இது இலங்கையில் உள்ள சைவ - தமிழ் சமூகத்தின் அடையாளத்தை அச்சுறுத்துவதாகக் கருதப்படுகின்றது.

### *கிறிஸ்தவக் குழுக்களுக்கு இடையேயான பதட்டம்*

கிறிஸ்தவ சமூகத்தினுள் குறிப்பாக கத்தோலிக்கர்கள் மற்றும் பிற கிறிஸ்தவப் பிரிவினரிடையே

16 மட்டக்களப்பு - பூநொச்சிமுனை மீன்பிடி படகு எரிக்கப்பட்டமைக்கு எதிராக மீனவர்கள் ஆர்ப்பாட்டம். (2024, June 24). https://www.virakesari.lk/article/186791

17 மட்டக்களப்பில் வெடிப்புச் சம்பவம் : இராணுவம், பொலிஸார் தீவிர விசாரணை. (2024, July 16). https://www.virakesari.lk/article/188570

18 காத்தான்குடியில் கைக்குண்டு மீட்பு : இராணுவம், விசேட அதிரடிப் படையினர் விசாரணை. (2024, July 22). https://www.virakesari.lk/article/189059

மத மாற்றம் தொடர்பான கருத்து வேறுபாடுகள் காரணமாக உள்ளக மோதல்கள் தோன்றியதாகக் கூறப்படுகின்றது. சில பிரிவுகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் தனிப்பட்ட நம்பிக்கைகள் அல்லது நிதி ஊக்குவிப்புகளால் இயக்கப்படும் மத மாற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகக் கூறப்படுகின்றது. இந்த நடவடிக்கைகளால் மாவட்டத்தில் உள்ள கிறிஸ்தவ சமூகத்தினருக்குள் உள்ளக பதட்டங்கள் மற்றும் மோதல்கள் ஏற்பட்டுள்ளன.

### *முஸ்லிம் குழுக்களுக்கு இடையேயான பதட்டம்*

மட்டக்களப்பில் சூ∴பி மற்றும் சுன்னி பிரிவினருக்கு இடையே கடந்த ஆண்டுகளில் முறுகல் நிலை காணப்பட்டது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்குப் பின்னர் முஸ்லிம் சமூகத்தினுள் நிலவிய உள் முரண்பாடுகள் தணிந்துள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது. ஒருவரையொருவர் பகிரங்கமாக விமர்சிக்கும் அல்லது மோதலில் ஈடுபடும் போக்கு குறைவாகவே காணப்படுவது அவதானிக்கப்படுகின்றது. இந்தக் குழுக்களுக்கிடையில் கடந்த காலத்தில் இருந்த வெளிப்படையான பகைமை சமீப காலங்களில் குறைந்துள்ள போதிலும் அடிப்படையான பதட்டங்கள் இன்னும் நீடிக்கின்றன.

1979 ஆம் ஆண்டு அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா[19] காத்தான்குடியில் உள்ள சூ∴பி முஸ்லிம்களின் தலைவரான மௌலவி ஏ. அப்துர் ரவூப் மிபாஹி மற்றும் அவரைப் பின்பற்றுபவர்கள் இஸ்லாத்தின் கொள்கைகளுக்கு எதிரானதாகக் கூறப்படும் அவர்களின் நம்பிக்கைகளுக்காக "முர்தத்" (மதம் மாறியவர்) என ∴பத்வா ஒன்றை வெளியிட்டது. 2017 ஆம் ஆண்டில் சஹ்ரான் தலைமையிலான தேசிய தவ்ஹீத் ஜமாத்தின் உறுப்பினர்களுக்கும், மௌலவி ஏ. அப்துர் ரவூப் மிபாஹி மற்றும் சூ∴பிஸத்தைப் பின்பற்றுபவர்களுக்கும் இடையேயான அலியார் சந்திப்பு மோதல் இந்த இரு பிரிவினருக்கும் இடையேயான முதல் வெளிப்படையான மோதலைக் குறித்தது. 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில், அல்ஹாஜ் அப்துல் ஜவாத் ஆலிம் வலியுல்லாஹ் அறக்கட்டளையின் செயலாளர் மௌலவி கே.ஆர்.எம்.ஸஹ்லான் ரப்பானி கடிதமொன்றில் காத்தான்குடியைச் சேர்ந்த தனிநபர்கள் முஸ்லிம் இளைஞர்களை வஹாபிசம் மற்றும் தீவிரவாதத்தை நோக்கி அணிதிரட்டுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து எச்சரித்தபோது, காத்தான்குடியைச் சேர்ந்த சூ∴பி தலைவருக்கு எதிராக வெளியிடப்பட்ட ∴பத்வா மீதான விவாதம் மீண்டும் தலைதூக்கியது. மௌலவி ஏ. அப்துர் ரவூப் மிபாஹிக்கு எதிராக 1979 இல் வெளியிடப்பட்ட ∴பத்வா எவ்வாறு அவரது அடிப்படை உரிமைகளை மீறியது மற்றும் மௌலவியின் உயிருக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியது என்பதை அவர் எடுத்துக்காட்டினார்.[20] இந்த ∴பத்வா 2023 ஆம் ஆண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.[21]

மேலும், தவ்ஹீத் சித்தாந்தத்தைப் பின்பற்றும் சமூகங்களுக்கிடையில் பல பிரிவுகள் மற்றும் கோட்பாடு வேறுபாடுகள் உள்ளன. சில குழுக்கள் மற்றவர்களை விட வேறுபட்ட விதிகள் மற்றும்

---

19 A formal ruling or interpretation on a point of Islamic law given by a qualified legal scholar

20 Moulavi cautions revival of Wahhabism from Kattankudy. (2022, January 17). Dailymirror.lk. https://www.dailymirror.lk/print/news/Moulavi-cautions-revival-of-Wahhabism-from-Kattankudy/239-229219

21 காத்தான்குடி அப்துர் ரவூப் இற்கு வழங்கப்பட்ட ∴பத்வா குறித்து ஜனாதிபதி கேள்வி. (2023, July 13). https://www.shortnews.lk/2023/07/blog-post_774.html

நடைமுறைகளைப் பின்பற்றுகின்றன மற்றும் தனித்தனி பள்ளிவாசல்களை இயக்குகின்றன. சிலர் தேசிய அளவில் பின்பற்றப்பட்ட நடைமுறைகளைக் கடைப்பிடிக்கின்றார்கள். ஏனையவர்கள் சவுதி அரேபியாவில் கடைப்பிடிக்கப்படுவதைப் பின்பற்றுகின்றார்கள். மேலும், மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்குடா பிரதேசத்தில் ஷியா முஸ்லிம்கள் வாழ்கின்றனர். இருப்பினும், அவர்களுக்கும் ஏனைய பிரிவினருக்கும் இடையே எந்தவிதமான பிரச்சினைகளோ மோதல்களோ பதிவாகவில்லை.

### *மத நிறுவனங்களில் நிர்வாக மற்றும் சாதி அடிப்படையிலான பிரச்சினைகள்*

பள்ளிவாசல்கள் மற்றும் கோவில்கள் உட்பட பல்வேறு மத நிறுவனங்களில் நிர்வாகச் சவால்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. பெரும்பாலும் சமூகத் தலைவர்கள் மற்றும் புத்திஜீவிகளை உள்ளடக்கிய அறங்காவலர் குழுக்கள் மதிப்புமிக்க பதவிகளுக்கான போட்டியில் ஈடுபடுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்தப் போட்டி சில சமயங்களில் சட்ட மோதல்கள் அல்லது வன்முறையாகக் கூட மாறுகின்றது. சாதி அடிப்படையிலான பாகுபாடு இந்து மதத்திற்குள் ஒரு குறிப்பிடத்தக்க பிரச்சினையாக உள்ளது. உயர் சாதியினர் கீழ் சாதியினரைத் தொடர்ந்து ஓரங்கட்டுகின்றனர்.

### *மதங்களுக்குள் நிலவும் பிளவுகளை அரசாங்கம் கண்காணித்தலும் சுரண்டலும்*

இந்த உள் மதப் பிரிவுகளை அரசாங்கம் கண்டறிந்து கண்காணித்து வருவதை அவதானிக்க முடிகின்றது. உளவுத் தகவல்களைச் சேகரிக்க பாதுகாப்புப் படைகள் பெரும்பாலும் இந்தப் பிரிவுகளைப் பயன்படுத்துவதாகத் தெரிகின்றது. எனினும், இந்த அணுகுமுறை எதிர்பாராத விளைவுகளை ஏற்படுத்துகின்றது. ஏனெனில் உள்ளக மோதல்களில் ஈடுபடும் நபர்கள் எதிரி குழுக்களைப் பற்றிய தவறான தகவல்களைப் பாதுகாப்பு நிறுவனங்களுக்கு வழங்கலாம். இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் இந்தப் பிரிவுகளைப் பயன்படுத்தி, மத நல்லிணக்கத்தை மேலும் சீர்குலைக்கும் தங்கள் நோக்கங்களை அடைவதற்குப் பயன்படுத்துகின்றனர்.

# அரச செயற்பாட்டாளர்களின் பங்கு மற்றும் ஈடுபாடு

## தொல்பொருளியல் திணைக்களம்

இலங்கையின் தொல்பொருளியல் திணைக்களம் இந்து கலாசாரச் சின்னங்களை பௌத்த சின்னங்களாக அடையாளப்படுத்தி உரிமை கோருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. வரலாற்று ரீதியாக சைவமும் தமிழ் கலாசாரமும் பின்னிப் பிணைந்தவை. பண்டைய காலங்களில் சைவத்திற்கும் பௌத்தத்திற்கும் இடையில் ஒரே மாதிரியான அம்சங்கள் காணப்பட்டன. இந்த வரலாற்று ரீதியான இணைப்பு கல்வெட்டுகள் மற்றும் கலைப்பொருட்களைக் கொண்ட பல கலாசார தளங்களைச் சர்ச்சைக்குரியதாக்கியுள்ளன. உதாரணமாக, தாந்தாமலை முருகன் கோயில், குசனார் மலை முருகன் கோயில், வேலோடு மலை முருகன் கோயில் மற்றும் சித்தாண்டி முருகன் கோயில் உட்பட பல சைவக் கோயில்கள் தொல்பொருளியல் திணைக்களத்தால் தொல்லியல் தளங்களாக மறுவகைப்படுத்தப்பட்டுள்ளன. இந்தச் செயல்களை தங்கள் மத அடையாளத்திற்கு அச்சுறுத்தலாக இந்து சமூகம் கருதுகின்றது.

## இராணுவம் மற்றும் காவல்துறை

மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இராணுவத்தினரும் காவல்துறையினரும் இணைந்து இராணுவ முகாம்கள் மற்றும் பொலிஸ் நிலையங்களுக்குள் அரச மரங்களை நட்டு புத்தர் சிலைகளை நிறுவியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இராணுவம் அல்லது காவல்துறை அந்த இடங்களை விட்டு வெளியேறிய பின்னரும் இந்த சிலைகள் பெரும்பாலும் அங்கேயே இருக்கும். இது அவர்களின் இருப்பைக் குறிப்பதுடன் இந்த இடங்களை அணுகும் ஏனைய மத சமூகங்களைப் புண்படுத்துகின்றது. மேலும், மட்டக்களப்பு மாவட்டத்திற்குள் கடத்தல் மற்றும் போதைப்பொருள் கடத்தல் போன்ற நடவடிக்கைகளில் பாதுகாப்புப் படையினர் ஈடுபடுவதாகக் கூறப்படுவதால் மக்களிடையே அவநம்பிக்கை அதிகரித்து வருகின்றது. ஆக்கிரமிப்பை முன்னெடுக்கும் சிங்களக் குடியேற்றக்காரர்கள் மற்றும் பௌத்த பிக்குகளுக்கு இராணுவமும் காவல்துறையினரும் பாதுகாப்பும் ஆதரவும் வழங்குவதாகவும் குற்றம் சாட்டப்படுகின்றது. குறிப்பாக, மயிலத்தமடு மேய்ச்சல் தரை விவகாரத்தில் உள்ளூர் தமிழ் சமூகத்தைக் கருத்தில் கொள்ளாமல் சிங்களக் குடியேற்றவாசிகளின் பக்கம் அவர்கள் செயல்படுவதாகக் கருதப்படுகின்றது.

## அரச உத்தியோகத்தர்களின் பாகுபாடு மற்றும் பக்கச்சார்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் குறிப்பாக நிதி ஒதுக்கீடுகள் மற்றும் வளங்களைப் பகிர்ந்தளிப்பதில் உள்ளூர் அரச உத்தியோகத்தர்கள் காட்டும் பக்கச்சார்பு குறித்த எச்சரிக்கைகள் அதிகரித்து வருகின்றன. உள்ளூர் உத்தியோகத்தர்கள் பெரும்பாலும் தங்கள் சொந்த மதத்தைச் சேர்ந்த சமூக உறுப்பினர்களுக்கு முன்னுரிமை அளிப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இது ஏனைய சமூகங்களை நியாயமற்ற முறையில் நடத்துவதற்கு வழிவகுக்கின்றது. உதாரணமாக, கிழக்கு மாகாண ஆளுநர் முஸ்லிம் சமூகத்தின் தேவைகளைப் புறக்கணிக்கும் அதேவேளை, இந்துக்களின் நலன்களை ஆதரிப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இவ்வாறான போக்கு முந்தைய ஆளுநர்களிடமும் காணப்பட்டதாகக் கூறப்படுகின்றது. அரச உத்தியோகத்தர்களால் முஸ்லிம்களுக்கு எதிராக பாகுபாடு காட்டப்படும் சம்பவங்கள்

பதிவாகியுள்ளன. மட்டக்களப்பில் உள்ள முஸ்லிம் பெண் அரச உத்தியோகத்தர் ஒருவருக்கு மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் பதவி உயர்வு மறுக்கப்பட்டு, பின்னர் திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பிரதேச செயலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டமை இந்த ஆண்டு பதிவான ஒரு உதாரணம் ஆகும்.

மட்டக்களப்பில் மாவட்ட செயலகம், பிரதேச செயலகங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களில் பணிபுரிபவர்கள் உட்பட சில அரச உத்தியோகத்தர்கள் முஸ்லிம்களுக்கு சாதகமற்ற அணுகுமுறையைக் காட்டுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த உத்தியோகத்தர்களில் சிலர் பள்ளிவாசல்களைப் பதிவு செய்வதற்கான அனுமதியைத் தடுத்து வருவதாகவும், முஸ்லிம் குடியேற்றங்களை முடக்கி வைப்பதாகவும், முஸ்லிம் ஆசிரியர்களை வேண்டுமென்றே தொலைதூரப் பகுதிகளுக்கு இடம்மாற்றுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இவ்வாறான சம்பவங்கள் கல்வித் திணைக்களம் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களில் உள்ள உத்தியோகத்தர்கள் இன மற்றும் மத அடிப்படையில் செயல்படுகின்றார்களா என்ற கேள்வியை எழுப்பியுள்ளது. பெப்ரவரி 2024 இல் நியமனம் செய்யப்பட்ட முஸ்லிம் பெண் ஆசிரியர்கள் தொலைதூர இடங்களில் பணியமர்த்தப்பட்டனர். அதேநேரம் தமிழ் பெண் ஆசிரியர்கள் அவர்களின் வீடுகளுக்கு அருகில் மிகவும் வசதியான இடங்களில் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த நியமனங்களில் மாகாணக் கல்விப் பணிப்பாளர் இனப்பாகுபாடு காட்டுவதாக ஆசிரியர்கள் குற்றம் சுமத்துகின்றனர். அதிக முஸ்லிம் சனத்தொகையைக் கொண்ட காத்தான்குடி நகரத்தில் பிரதேச செயலாளர் பதவிக்கு தகுதியான முஸ்லிம் உத்தியோகத்தர்கள் இருந்த போதிலும், கடந்த ஆறு ஆண்டுகளாக தமிழ் பிரதேச செயலாளர் ஒருவர் பதவி வகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இப்பிரச்சினைகளை ஏற்படுத்துவதில் உள்ளூராட்சி நிர்வாகிகள் முதல் பல்வேறு மட்டங்களில் உள்ள உயர் அதிகாரிகள் வரையான அரச அதிகாரிகள் ஈடுபட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

## <u>ஏனைய அரச செயற்பாட்டாளர்கள்</u>

மேற்குறிப்பிட்ட விடயங்களுக்கு மேலதிகமாக, வன பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் இலங்கை மகாவலி அதிகாரசபையின் தலையீடு முக்கியமானது எனவும், குறிப்பாக மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரை போன்ற விடயங்களில் சிங்கள சமூகத்தின் நலன்களை நிலைநாட்டுவதில் இந்த அரச செயற்பாட்டாளர்கள் உடந்தையாக இருப்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு தொல்பொருளியல் திணைக்களத்துடன் இணைந்து செயற்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மத நிறுவனங்கள் மீது சோதனைகளைத் திணிக்கும் அறிக்கைகள் உட்பட அமைச்சின் நடவடிக்கைகள் பிராந்தியத்தில் மத சுதந்திரத்தின் நிலை குறித்த நேரடி எச்சரிக்கைகளை எழுப்புகின்றன. ஏனைய மதக் குழுக்களைப் பற்றிய அமைச்சின் அறிவு மற்றும் புரிதல் இல்லாமை இந்தக் குழுக்களின், குறிப்பாக மத சிறுபான்மையினரை நியாயமாக மற்றும் பக்கச்சார்பற்ற முறையில் நடத்துவதைப் பாதிக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

ஒட்டுமொத்தமாக, நிலத்தை ஆக்கிரமித்தல், கண்காணிப்பை முன்னெடுத்தல் மற்றும் உள்ளூர் மத சமூகங்களின் எச்சரிக்கைகளை நிராகரிப்பது போன்ற விடயங்களில் இராணுவம் மற்றும் காவல்துறையின் ஆதரவுடன் அரச நிறுவனங்களுக்கிடையேயான செயலூக்கமான

ஒத்துழைப்பு பல சிக்கல்களுக்கு வழிவகுத்தது. இவ்வாறான ஒத்துழைப்பு மட்டக்களப்பில் பொதுவானதாகக் காணப்படுகின்றது.

## ஏனைய தொடர்புடைய காரணிகள், அவதானிப்புகள் மற்றும் எதிர்காலப் போக்குகள்

### ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களின் தாக்கம்

இலங்கையில் ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்கள் நெருங்கிவரும் நிலையில், மதக் கலவரங்கள் மற்றும் மோதல்கள் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து எச்சரிக்கைகள் எழுந்துள்ளன. குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் மதம் மற்றும் சமூகத்தைப் பாதுகாக்கும் வகையில் தேர்தல் பிரச்சாரங்கள் கட்டமைக்கப்பட்டதாக எச்சரிக்கைகள் உள்ளன. அண்மையில், ரணில் விக்கிரமசிங்க மற்றும் சஜித் பிரேமதாச போன்ற ஜனாதிபதி வேட்பாளர்கள் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம் செய்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.[22] அண்மையில் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கான பிரச்சாரக் கூட்டமானது இன அடிப்படையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், முஸ்லிம் மற்றும் தமிழ் சமூகத்தினருக்காக தனித்தனி கூட்டங்கள் நடத்தப்பட்டதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இதன்போது ஒவ்வொரு சமூகத்திற்கும் எதிரான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.[23] மேலும், இந்த ஆண்டு தேர்தலில் தமிழ் சிவில் சமூகம், கத்தோலிக்க மற்றும் சைவ மதகுருமார் உட்பட வட கிழக்கு மாகாணங்களின் மதத் தலைவர்கள் தமிழ் பொது வேட்பாளரின் பின்னால் அணிதிரண்டு வருகின்றனர்.[24]

இம்மாவட்டத்தில் தேர்தல் பிரச்சாரங்கள் எவ்வாறு அமையும் என்ற அச்சம் முஸ்லிம் சமூகத்தினரிடையே நிலவுகின்றது. கடந்த தேர்தல் பிரச்சாரங்களின் அடிப்படையில் இந்த ஆண்டும் முஸ்லிம்களை வேறுபடுத்தும் தந்திரோபாயம் பயன்படுத்தப்படலாம் என்ற எச்சரிக்கைகள் உள்ளன. முஸ்லிம் மக்கள்தொகை அதிகரித்து வருகின்றது எனவும், முஸ்லிம்கள் தீவிரவாதிகள் என்று பொதுமைப்படுத்தியும் தொடர்ந்து பிரச்சாரம் செய்யப்பட்டு வருவது அவதானிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத் தேர்தல்களின்போது வன்முறைகள் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகளும் எச்சரிக்கையளிக்கின்றன. குறிப்பாக தேர்தல் நலன்களுக்காக சமூகங்களுக்கிடையில் அடிக்கடி பதட்டங்களைத் தூண்டும் பிராந்திய அரசியல்வாதிகளின் நடவடிக்கைகள் இதற்குக்

---

22 President Inspects Restoration Work of Zion Church in Batticaloa. (2024, June 23). News.lk; Department of Government Information Sri Lanka. https://www.news.lk/news/political-current-affairs/item/36516-president-inspects-restoration-work-of-zion-church-in-batticaloa
Sajith Premadasa, the leader of the opposition, meets with unemployed graduates in Batticaloa and promises to take up their concerns in parliament. (2024). Serenbona.lk. https://serenbona.lk/index.php/2024/07/07/sajith-premadasa-the-leader-of-the-opposition-meets-with-unemployed-graduates-in-batticaloa-and-promises-to-take-up-their-concerns-in-parliament/

23 https://www.facebook.com/Minnal24newspageofficial/videos/3887154548170155/

24 Tamil Common Candidate P Ariyaneathran. (2024, August 8). https://lankasara.com/news/tamil-common-candidate-p-ariyaneathran

காரணமாக உள்ளது. அண்மைக் காலமாக கிழக்கு மாகாணத்தில் தமிழ் - முஸ்லிம் பிரச்சினை எவ்வாறு முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது என்பதை விளக்குவதற்கு இரண்டு சம்பவங்கள் குறிப்பிடப்படுகின்றது. சம்மாந்துறையில் முஸ்லிம் கிராமத்தினுள் தமிழ் கிராமத்துக்கான வரவேற்பு வளைவு வைக்கப்பட்ட விவகாரம் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களுக்கு இடையில் முறுகல் நிலையை ஏற்படுத்தியுள்ளது. குறித்த பலகையை அங்கு வைக்குமாறு தமிழ் அரசியல்வாதி ஒருவர் தெரிவித்ததாகக் குறிப்பிடப்படுகின்றது.[25] அதேபோன்று கல்முனையில் தமிழ் கிராமம் ஒன்றில் மறைந்த மொஹமட் அஷ்ரப்பின் ஞாபகார்த்த அருங்காட்சியகத்தை நிர்மாணிப்பதற்கு ஆதரவாக முஸ்லிம் அரசியல்வாதிகள் ஈடுபட்டு வருவது தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களுக்கு இடையே விரிசல்களை ஏற்படுத்தியுள்ளது. இந்தச் சம்பவங்கள் இரு சமூகங்களுக்கிடையில் ஏற்கனவே நடந்துவரும் பிரச்சினைகளை நியாயமற்ற முறையில் மேலும் தீவிரப்படுத்தக்கூடிய எச்சரிக்கைக்குரிய விடயங்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இப்பிரச்சினைகள் மட்டக்களப்பில் இடம்பெறவில்லை, அம்பாறை மாவட்டத்திலேயே இடம்பெற்றுள்ளன. எனினும் இது பின்விளைவுகளை ஏற்படுத்தி மட்டக்களப்பிலும் பதட்டங்களை ஏற்படுத்தக்கூடிய சாத்தியம் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

### *மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து அரசியல் பிரதிநிதித்துவம் பறிபோகும் என்ற அச்சம்*

எதிர்காலத்தில் தமிழர்களும் முஸ்லிம்களும் அரசியல் பிரதிநிதித்துவத்தை இழக்க நேரிடும் என்ற எச்சரிக்கை அதிகரித்து வருகின்றது. மாவட்டத்தில் இருந்து முஸ்லிம் சமூகத்திற்கு ஒரு அரசியல் பிரதிநிதி மட்டுமே உள்ள நிலையில் ஏற்கனவே அரசியல் பிரதிநிதித்துவம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்த ஜனாதிபதி ஒருவர் தெரிவு செய்யப்பட்டால் அவர் பௌத்த மதத்திற்குச் சார்பான வகையில் ஆட்சியமைத்து மாவட்டத்தில் உள்ள ஏனைய மதக் குழுக்களின் நிலைமையை மேலும் மோசமாக்கலாம் என்ற அச்சம் மேலோங்கியுள்ளது. இந்த அச்சம் தமிழ் வேட்பாளர் உடன்படிக்கையில் எதிரொலிக்கின்றது. இந்தக் எச்சரிக்கைகளை நிவர்த்தி செய்வதையும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள தேசிய இன - மத சிறுபான்மையினரின் உரிமைகளுக்காக வாதிடுவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## சமூக ஊடகங்கள், தவறான தகவல் மற்றும் வெறுப்பு பேச்சு

கொழும்பு மற்றும் பிற நகர்ப் புறங்களை மையமாகக் கொண்ட தேசிய பிரச்சினைகளில் முதன்மையாகக் கவனம் செலுத்தும் பிரதான ஊடக செனல்களை போலன்றி, பிராந்திய ஊடகங்களுக்கு சமூக ஊடக தளங்கள் குறிப்பாக மட்டக்களப்புக்கு சக்திவாய்ந்த கருவியாக மாறியுள்ளன. இந்தப் பிராந்திய ஊடகங்கள் குறிப்பிட்ட பார்வையாளர்களுக்காக இயங்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. தமிழ் செய்தியாளர்கள் பெரும்பாலும் தமிழ் பார்வையாளர்களுக்காக எழுதுகின்றார்கள், முஸ்லிம் செய்தியாளர்கள் முஸ்லிம் சமூகங்களின் குறிப்பிட்ட பிரச்சினைகள் குறித்து அறிக்கையிடுகின்றார்கள். உதாரணமாக, மட்டக்களப்பில்

25 வீரமுனை கிராமத்திற்கான நுழைவாயில் வரவேற்பு வளைவு விவகாரம்...! வழக்கு ஒத்திவைப்பு. (2024, June 21). Tamil News. https://samugammedia.com/the-issue-of-the-welcome-arch-at-the-entrance-to-veeramune-village-adjournment-of-the-case-1718950399?page=14

மரம் வெட்டும் சம்பவத்தின்போது ஒரு முக்கிய தமிழ் அரசியல்வாதியின் ஆதரவுடனான சமூக ஊடகத் தளங்கள், சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி மக்களைத் திரட்டி பதட்டத்தை ஏற்படுத்துவதற்கு நிகழ்வை முழுமையாக ஒளிபரப்பியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. டிக்டாக், ஃபேஸ்புக் மற்றும் இன்ஸ்டாகிராம் போன்ற சமூக ஊடக தளங்கள் காட்சி உள்ளடக்கத்தைப் பகிர்வதில் குறிப்பாக சக்திவாய்ந்ததாக மாறியுள்ளன. மேலும் இந்த சக்தியை அடையாளம் கண்டுகொண்டவர்கள் தங்கள் சொந்த நிகழ்ச்சி நிரல்களை முன்னெடுப்பதற்கு இவற்றைப் பயன்படுத்துகின்றனர். இந்தத் தளங்களில் கிறிஸ்தவர்களும் இந்துக்களும் அடிக்கடி மோதுவதை அவதானிக்க முடிகின்றது. இது சமூக ஊடக “சண்டைகளுக்கு” வழிவகுப்பதுடன் பதட்டங்களைத் தூண்டுகிறது.

வரவிருக்கும் தேர்தலில் அரசியல் பிரச்சாரங்களில் சமூக ஊடகங்கள் முக்கிய பங்கு வகிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பெரும்பாலான அரசியல்வாதிகள் சமூக ஊடக பிரச்சாரங்களுக்காக குறிப்பிடத்தக்க அளவு பணத்தைச் செலவழித்து தனிப்பட்ட ஊடகக் குழுக்களை வைத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தக் குழுக்கள் வேட்பாளர்களுக்காகப் பிரச்சாரம் செய்யவும், சமூக ஊடகத் தளங்களில் எதிர்க்கட்சியினரின் வாதங்களை எதிர்க்கவும் பெரும்பாலும் இளைஞர்களை வேலைக்கு அமர்த்தி அவர்களுக்கு வைஃபை, டேட்டா, பணம் மற்றும் உணவு ஆகியவற்றை வழங்குகின்றன.

## *மட்டக்களப்பு மற்றும் சமூக ஊடகங்களில் இளைஞர்கள்*

சமூக ஊடகங்களின் எழுச்சியானது தவறான தகவல் மற்றும் வெறுப்பு பேச்சுகளின் பரவல் அதிகரிப்பதற்கு வழிவகுத்துள்ளதுடன், குறிப்பாக இந்தச் செல்வாக்கினால் அதிகம் பாதிக்கக்கூடிய இளைஞர்களிடம் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. கலாச்சார மற்றும் மத அடையாளத்தைப் பாதுகாப்பதற்கான வலுவான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதுடன், இது குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகி வருகின்றது. வெளிப்படையான வன்முறையின் வேர்கள் சமூக ஊடக தளங்களில் ஆரம்பிக்கின்றன. அவை கருத்து வெளிப்பாட்டின் முதன்மை தளமாக மாறியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், மீம்ஸ் பரிமாற்றம் மற்றும் ஏனைய நவீன உள்ளடக்கம் போன்ற புதிய கருத்து வெளிப்பாட்டு வடிவங்கள் ஆன்லைனில் சமூகங்களுக்கு எதிரான மறுப்பை வெளிப்படுத்தப் பயன்படுத்தப்படுகின்றன. அடையாள சரிபார்ப்பு பிரச்சினைகள் காரணமாக திருகோணமலை மாவட்டத்தில் ஹிஜாப் அணிந்த முஸ்லிம் மாணவிகள் பரீட்சை பெறுபேறுகள் இடைநிறுத்தப்பட்ட விவகாரம் இதற்கான சமீபத்திய உதாரணம் ஆகும்.[26] இந்தச் சம்பவம் இளம் பயனர்களிடையே சமூக ஊடக சண்டைகளுக்கு வழிவகுத்தது. அவர்கள் முஸ்லிம் பெண்களின் ஆடைகள் மற்றும் கட்டுப்பாடுகள் குறித்து தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தினர். இந்தத் தர்க்கங்கள் உடல் ரீதியான வன்முறையாக மாறவில்லை என்றாலும், அவை வெறுப்பூட்டும் பேச்சுகளைப் பரப்பியதாகக் கூறப்படுகின்றது. இந்தப் பிரச்சினைகளும் இணையத்தள மோதல்களும் இன நல்லிணக்கத்திற்கு அச்சுறுத்தல் மற்றும் கிழக்கு மாகாணத்தில் உள்ள சமூகங்களின் மத சுதந்திரம் பற்றிய எதிர்மறையான உரையாடல்கள் பற்றிய பரந்த எச்சரிக்கைகளுக்குப்

---

26 Advanced Level exam results of Muslim students suspended over hijab. (2024, June 12). https://www.tamilguardian.com/content/advanced-level-exam-results-muslim-students-suspended-over-hijab

பங்களிக்கின்றன.

## மத வெளிப்பாடு மற்றும் நடைமுறை மீதான தொடர்ச்சியான கட்டுப்பாடுகள்

சொந்த மதக் குழுவின் உறுப்பினர்கள், ஏனைய மதக் குழுக்கள் மற்றும் அரசாங்கம் மற்றும் அரசு சாரா அதிகாரிகளால் தனிநபர்கள் மீது விதிக்கப்படும் கட்டுப்பாடுகள் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. முஸ்லிம் பெண்கள் ஹிஜாப் அணிவதற்கான கட்டுப்பாடுகள் மற்றும் தொல்பொருள் இடங்களாக அறிவிக்கப்பட்ட இடங்களுக்கு, குறிப்பாக சைவக் கோயில்களுக்கு மக்கள் செல்வதைத் தடுப்பது போன்றவை இதற்கான உதாரணங்கள் ஆகும். மேலும், பாடசாலைகளில் மாணவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள விதிகள் மூலம் பாரபட்சமான செயல்கள் நடப்பதாகப் புகார் எழுந்துள்ளது. உதாரணமாக, சில முஸ்லிம் பாடசாலைகளில் இந்து மாணவர்கள் தங்கள் சீருடையின் ஒரு பகுதியாக சல்வார் பேன்ட் அணிய வேண்டும் என்று கூறப்படுகின்றது. அதேவேளை கிறிஸ்தவப் பாடசாலைகளில் இந்து மாணவர்கள் பொட்டு அணியத் தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும், மாணவர்களின் உடல் தோற்றம் அல்லது தனிப்பட்ட கருத்து வெளிப்பாடு காரணமாக கல்வி நடவடிக்கைகளில் பங்கேற்கத் தடை விதிக்கப்பட்ட சம்பவங்கள் பதிவாகியுள்ளன. உதாரணமாக, மே 2023 இல் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் முஸ்லிம் மாணவர் ஒருவர் தாடி வைத்திருந்த காரணத்தால் விரிவுரைகளில் கலந்துகொள்வதற்கும் பரீட்சை எழுதுவதற்கும் தடை விதிக்கப்பட்டது. பல்கலைக்கழக உத்தியோகத்தர்களின் பாரபட்சத்தை எதிர்கொண்ட அவர் 2023 ஜூன் முதலாம் திகதி மட்டக்களப்பில் உள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்தார்.[27] சைவ, கிறிஸ்தவ மற்றும் இஸ்லாமியப் பாடசாலைகளில் ஏனைய மதக் குழுக்களைச் சேர்ந்த மாணவர்களின் சேர்க்கை செயல்முறைகளிலும் மதப் பாகுபாடு தெளிவாகத் தெரிகின்றது. இப்பாடசாலைகளுக்கான மாணவர் சேர்க்கைக்கான தெரிவுநிலை மாவட்டத்தில் நீண்டகாலமாக தொடரும் பிரச்சினையாக இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பெண்கள் தமது சொந்த விருப்பத்திற்கேற்ப மத சுதந்திரம் மற்றும் கருத்துக்களை வெளிப்படுத்தும் திறனைக் கட்டுப்படுத்தும் பல சவால்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்தக் கட்டுப்பாடுகளுக்கு பல காரணிகள் பங்களிக்கின்றன.

- பெண்களுக்கான மட்டுப்படுத்தப்பட்ட தலைமைப் பொறுப்புகள்

மத நிறுவனங்களுக்குள் தலைமைப் பொறுப்புகளில் பெண்கள் இல்லாதது அடிப்படைப் பிரச்சினைகளில் ஒன்றாகும். தேவாலயங்கள், கோயில்கள் மற்றும் பள்ளிவாசல்களின் அறங்காவலர் குழுவில் முடிவெடுக்கும் பதவிகளில் பெண்கள் பெரும்பாலும் ஒதுக்கப்படுகின்றனர். இவ்வாறு விலக்கப்படுவது அவர்களின் சொந்த மதம் மற்றும் வழிபாட்டுத் தலங்களைப் பற்றிய பயனுள்ள தகவல்களைப் பெறுவதற்கும், அவர்களின் மத சமூகத்துடனான தொடர்பை உணரும் திறனில் குறிப்பிடத்தக்க குறைபாடாகக் காணப்படுகின்றது.

---

27 Vidivelli. (2023, December 21). கிழக்குப் பல்கலைக் கழகத்தில் தாடி வைத்துள்ள மருத்துவபீட மாணவருக்கு அனுமதி மறுப்பு. https://www.vidivelli.lk/article/16225

• FoRB பற்றிய விழிப்புணர்வு இல்லாமை

மட்டக்களப்பின் பல பகுதிகளில், பல்வேறு அரச நிறுவனங்கள் தங்கள் சமூகங்களின் மதம் அல்லது நம்பிக்கை சுதந்திரத்தை எவ்வாறு பாதிக்கின்றன என்பது போன்ற அடிப்படைப் பிரச்சினைகள் குறித்து பெண்கள் முழுமையாக அறிந்திருக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. மட்டக்களப்பில் நில அபகரிப்பு, வழிபாட்டுத் தலங்களைப் பதிவு செய்வதில் உள்ள சிரமங்கள், மதங்களுக்கு உள்ளேயான பிரச்சினைகள், மத மாற்றம் தொடர்பான கலந்துரையாடல்கள் போன்ற குறிப்பிட்ட விடயங்கள் பெண்களால் முழுமையாகப் புரிந்து கொள்ளப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த இடைவெளி அவர்கள் தலைமைப் பதவிகளில் இருந்து விலக்கப்பட்டதன் காரணமாக ஏற்பட்டுள்ளது. அத்தகைய தகவல்கள் பொதுவாக இவ்வாறான தலைமைப் பொறுப்புகளிலேயே பகிரப்படுகின்றது. இந்தக் கலந்துரையாடல்கள் மற்றும் தகவல்களுக்கான அணுகல் ஆண்களுக்கே அதிகம் கிடைக்கின்றது.

• கலாசார விதிமுறைகள்

இம்மாவட்டத்தில் பெண்கள் மீதான மத மற்றும் கலாசாரக் கட்டுப்பாடுகள் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. வழிபாட்டுத் தலங்கள், குறிப்பாக உடைகள் தொடர்பாக விதிக்கப்படும் கட்டுப்பாடுகள் அதிகரித்துள்ளன. பெண்கள் தங்கள் மாதவிடாய் காலங்களில் கோயில்கள், பூஜை அறைகள் மற்றும் இறுதிச் சடங்குகளில் பங்கேற்பதற்குத் தொடர்ந்து தடை விதிக்கப்படுகின்றது.

## பிராந்தியவாதச் சிக்கல்

பிராந்திய சார்பு பிரச்சினை மேலும் கவனம் பெறுவதாகக் கூறப்படுகின்றது. ஒரு பிராந்தியத்தின் ஆட்சி அதிகாரங்கள் மற்றும் நிர்வாகக் கட்டமைப்புகள் அங்கு வாழ்பவர்களால் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்ற கொள்கையைக் கொண்டுள்ள பிராந்தியவாதம், பிராந்திய அடையாளத்தின் மீது வலுவான உரிமையை ஏற்படுத்துகின்றது. இது பெரும்பாலும் உள்ளூர் மக்கள் வெளிநபர்களை எதிர்ப்பதில் ஏற்படுகின்றது. ஏனைய பிரதேசங்கள் அல்லது மாவட்டங்களில் இருந்து வரும் நபர்கள் அடிக்கடி எதிர்ப்பை எதிர்கொள்கின்றனர். ஏனெனில் ஏனைய பிராந்தியங்களைச் சேர்ந்தவர்கள் அதிகாரம் அல்லது செல்வாக்குமிக்க பதவிகளை வகிக்கக்கூடாது என்ற நம்பிக்கை நிலவுகின்றது. உதாரணமாக, மட்டக்களப்புக்கு வெளியில் இருந்து வரும் கிறிஸ்தவ போதகர்கள் மாவட்டத்திற்குள் பணிபுரிய முயற்சிக்கும்போது குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்கொள்கின்றனர். இந்தச் சிரமங்கள் இந்து மத தலைவர்களையும் பாதிக்கின்றது. மட்டக்களப்பின் முக்கியமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கும் விரிவுபடுத்துவதற்கும் ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த மதத் தலைவர்களின் ஆதரவு தேவைப்படும் போது இந்தப் பிரச்சினை மிகவும் முக்கியமானதாக மாறுவது குறிப்பிடத்தக்கது.

## சர்வமதக் குழுக்கள்: அதிகாரம் மற்றும் சுதந்திரம் இன்மை

சமயங்களுக்கிடையிலான நல்லிணக்கத்திற்காகச் செயற்படும் குழுக்களுக்கு தற்போது உண்மையான அதிகாரம் இல்லாததால் மோதல்கள் ஏற்படும்போது அவற்றை விரைவாகத்

தீர்ப்பது கடினமாக உள்ளது. உதாரணமாக, மட்டக்களப்பு நகரிலுள்ள பள்ளிவாசலுக்கு முன்னால் உள்ள மரம் வெட்டப்பட்டபோது மாவட்டத்தில் பதட்டம் அதிகரித்தது. அப்போது, சம்பந்தப்பட்ட தரப்பினரை வரவழைத்து நிலைமையைத் தணிக்க உத்தரவு பிறப்பிக்க மதத் தலைவர்கள் மற்றும் சிவில் செயற்பாட்டாளர்களுக்கு அதிகாரம் இருக்கவில்லை என்று கூறப்படுகின்றது. மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரை மோதல் போன்ற நீண்டகாலப் பிரச்சனைகளில் மதங்களுக்கு இடையிலான மட்டுப்படுத்தப்பட்ட பங்கு மற்றுமொரு உதாரணம் ஆகும். அங்கு அவர்களின் ஈடுபாடு மற்றும் அழுத்தம் கொடுக்கும் திறன் குறைவாக உள்ளது. மேலும், சர்வமதக் குழுக்கள் மற்றும் மன்றங்களின் சுதந்திரம் குறைவது குறித்த எச்சரிக்கைகள் உள்ளன. குறிப்பாக எதிர்கால மோதல்களைத் தீர்ப்பதற்கு இந்த மன்றங்கள் தலையிட வேண்டியிருப்பதால் இது குறிப்பிடத்தக்க பிரச்சினையாகக் கருதப்படுகின்றது. அவற்றின் செயல்பாடுகள் பெரும்பாலும் சம்பந்தப்பட்ட அரசு சாரா நிறுவனங்களின் (NGO) செயலில் உள்ள திட்டங்களால் ஆதரிக்கப்படும் காலகட்டங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. ஏனைய நேரங்களில் செயலற்றுக் காணப்படுகின்றன.

## நடவடிக்கைகளுக்கான பரிந்துரைகள்

1. தகவல் அறியும் உரிமை மற்றும் சட்ட வழிமுறைகள் குறித்த விழிப்புணர்வு

நிலத் தகராறுகள், நில அபகரிப்பு மற்றும் ஆக்கிரமிப்பு ஆகியவை இடம்பெறும் நிலையில், இந்தப் பிரச்சினைகள் பற்றிய தகவல்களை அணுகுவதற்கும் தெளிவுபடுத்துவதற்கும் கிடைக்கக்கூடிய வழிமுறைகள் குறித்து பொதுமக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை (RTI) பயன்படுத்துவது குறித்த விழிப்புணர்வும் இதில் அடங்கும். இது நில வழக்குகள் பற்றிய தகவல்களைப் பெறவும், சட்ட உதவியைப் பெறுவது குறித்த சிறந்த விழிப்புணர்வைப் பெறவும் உதவுகின்றது. நிலத் தகராறுகள் மற்றும் ஆக்கிரமிப்பு வழக்குகளைத் தீர்ப்பதில் யாரை அணுக வேண்டும் என்பதை சமூகங்கள் அறிந்திருப்பது அவசியம் ஆகும்.

2. FoRB குறித்து அரச உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி

மத ரீதியான நிலத் தகராறுகள், தொல்பொருள் இடங்கள் மற்றும் மதம் அல்லது நம்பிக்கை சுதந்திரம் போன்ற பிரச்சினைகளை எவ்வாறு தீர்ப்பது என்பது குறித்து காவல்துறை உத்தியோகத்தர்கள் போன்ற அரச உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வு பயிற்சி அளிக்கப்பட வேண்டும். இந்தப் பயிற்சிகள் தலையீடுகள் நியாயமானதாகவும், சரியானதாகவும் இருப்பதை உறுதிசெய்ய உதவ வேண்டும், சூழ்நிலைகளை நடுநிலையோடு மதிப்பிடுவதற்கு உத்தியோகத்தர்களைத் தயார்படுத்த வேண்டும். பிரதேச செயலகங்கள், மாவட்டச் செயலகங்கள், கிராம உத்தியோகத்தர்கள், அத்துடன் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் உட்பட ஏனைய சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி உத்தியோகத்தர்களும் FoRB ஐ மதிக்க வேண்டியதன் முக்கியத்துவம் குறித்த பயிற்சியைப் பெற வேண்டும்.

3. FoRB தொடர்பான மோதல்களில் சமூக ஊடகங்களின் பங்கை நிவர்த்தி செய்தல்

FoRB தொடர்பான பதட்டங்களை அதிகரிப்பதில் சமூக ஊடகங்களின் வளர்ந்து வரும் பங்கைக் கருத்தில் கொண்டு, பிராந்திய உண்மைச் சரிபார்ப்பு வழிமுறைகளை நிறுவ முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். சரியான நேரத்தில் உண்மைச் சரிபார்ப்பை உறுதி செய்வதற்கும், தவறான தகவல் பரவுவதைத் தடுப்பதற்கும், வன்முறைக்கான சாத்தியக்கூறுகளைக் குறைப்பதற்கும் பொறுப்புள்ள தனிநபர்கள் மற்றும் அமைப்புகளை இவை உள்ளடக்கியிருக்க வேண்டும்.

4. சர்வமத மன்றங்களை வலுப்படுத்துதல்

நிதியளிக்கப்பட்ட திட்டக் காலங்களுக்கு அப்பால் தங்கள் பணியை நிலைநிறுத்துவதில் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களில் கவனம் செலுத்தி சுதந்திரமாகச் செயற்பட, சர்வமத மன்றங்கள் வலுப்படுத்தப்பட வேண்டும். அவர்களின் பலம் மற்றும் வரம்புகளை உணர்ந்து, வலுவான மன்றங்களை உருவாக்குவதில் கவனம் செலுத்த வேண்டும் மற்றும் பிராந்திய மட்டத்தில் தங்கள் செல்வாக்கை அதிகரிக்க அரச மற்றும் அரசு சாரா அமைப்புகளுடன் இணைக்க வேண்டும்.

5. கருத்தியல் தாக்கங்களைக் கண்காணித்தல் மற்றும் ஆய்வு செய்தல்

உள்ளூர் சமூகங்கள் மீது இந்துத்துவா மற்றும் சிங்கள - பௌத்தம் போன்ற சித்தாந்தங்கள் திணிக்கப்படுவதால் ஏற்படும் தாக்கம் மற்றும் நீண்டகாலப் பின்விளைவுகளைப் புரிந்துகொள்ள மேலும் கண்காணிப்பு தேவைப்படுகின்றது. எதிர்காலத்தில் இத்தகைய குழுக்களால் தூ ண்டப்படும் சாத்தியமான வன்முறைகளைத் தடுக்க, இந்தச் சித்தாந்தங்களை ஊக்குவிக்கும் பல்வேறு அமைப்புகளின் பங்கைக் கண்காணிப்பது மிகவும் முக்கியமானது.

# பின்னிணைப்பு - அரைக் கட்டமைக்கப்பட்ட நேர்காணல் வழிகாட்டுதல்

## NCEASL இன் நிலை பற்றிய ஆய்வு - மட்டக்களப்பு மற்றும் வவுனியா

எனது பெயர் _______. 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் வவுனியா மற்றும் மட்டக்களப்பில் மத சுதந்திரம் மற்றும் நம்பிக்கைகளின் நிலை குறித்த ஆய்வில் இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷ கூட்டணியை (NCEASL) நான் ஆதரிக்கிறேன். இந்த மாவட்டங்களில் மதம் அல்லது நம்பிக்கை சுதந்திரத்திற்கான சவால்கள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதே திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். ஆய்வை முன்னெடுப்பதன் மூலம் இந்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். நீங்கள் இந்தப் பகுதியில் உள்ள சமூகங்களுடன் பணிபுரிந்த முக்கியமான பங்குதாரராக இருப்பதாலும், இந்த ஆய்வுக் கூறுகளுக்கு மதிப்புமிக்க உள்ளீட்டை வழங்கக்கூடியவர் என்பதாலும் நான் உங்களுடன் இந்த நேர்காணலை நடத்துகின்றேன். அனைத்து மத சமூகங்களுக்கும் மத சுதந்திரத்தின் நிலையை முன்னேற்றுவதற்கு இந்த மாவட்டத்தில் செயற்பாடுகளை முன்னெடுக்க நீங்கள் வழங்கும் தகவல்கள் NCEASLக்கு முக்கியமானதாக இருக்கும்.

அடிப்படை விதிகள்:

1. **ரகசியம் பேணுதல்:** உங்கள் பெயர் மற்றும் ஏனைய தனிப்பட்ட விபரங்கள் இறுதி அறிக்கையில் சேர்க்கப்படாது. ஒரு விரிவான பகுப்பாய்வை உருவாக்க நீங்கள் வழங்கும் தகவல் ஏனைய நேர்காணல்களுடன் இணைக்கப்படும்.
2. **தனியுரிமை:** நீங்கள் வழங்கும் தகவல் தனிப்பட்டதாகவும் ரகசியமானதாகவும் இருக்கும். இது NCEASL மற்றும் இந்த ஆய்வின் அறிக்கை எழுத்தாளருடன் மட்டுமே பகிரப்படும்.
3. **தன்னார்வ பங்கேற்பு:** நீங்கள் கேள்விக்குப் பதிலளிக்க விரும்பாவிட்டால் தயங்காதீர்கள். உங்களால் முடிந்த மற்றும் பதில் கூற விரும்புவதற்கு மட்டும் பதிலளியுங்கள்.
4. **திரும்பப் பெறுவதற்கான உரிமை:** இந்த நேர்காணலை நீங்கள் எப்போது நிறுத்த விரும்பினாலும் எந்த விளைவுகளும் இல்லாமல் அவ்வாறு செய்ய உங்களுக்கு விருப்பம் உள்ளது.

பங்குதாரரின் விபரங்கள்
பங்குதாரரின் பெயர்:
பங்குதாரரின் வகை: (எ.கா., செயற்பாட்டாளர்/சட்டத்தரணி)
இடம்:

கேள்விகள்

1. மத சுதந்திரத்தின் நிலை தொடர்பில் மாவட்டத்தின் தற்போதைய நிலை குறித்து உங்கள் கருத்து என்ன?
   அ. 2023 முதல் மாவட்டத்தில் உள்ள முக்கிய பிரச்சினைகள் என்ன?

2. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் காரணமாக இம்மாவட்டத்தில் மத சுதந்திரத்தின் நிலை பாதிக்கப்படும் என நீங்கள் நினைக்கின்றீர்களா?
   அ. ஆம் எனில், இதன் தாக்கம் என்ன என்பதை விளக்க முடியுமா?
   ஆ. பாதிக்கப்பட்ட மதக் குழுக்கள் எவை?

3. இந்த மாவட்டத்தில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் விளைவு என்ன?
   அ. கடந்த 2 ஆண்டுகளில் மாவட்டத்தில் தாக்குதல்களின் பாதிப்புகள் தீர்க்கப்பட்டனவா?
   ஆ. இல்லையெனில், எந்தெந்தப் பிரச்சனைகள் இன்னும் உள்ளன?

4. 2023 ஆம் ஆண்டு முதல் மாவட்டத்தில் நில அபகரிப்பு நிலைமை என்ன?
   அ. அவ்வாறான நில அபகரிப்புக்கான உதாரணங்களை உங்களால் வழங்க முடியுமா?
   ஆ. நில அபகரிப்பில் ஈடுபட்ட மற்றும் நில அபகரிப்பால் பாதிக்கப்பட்ட தரப்பினர் யார்?

5. 2023 ஆம் ஆண்டு முதல் மாவட்டத்தில் மத மாற்றங்களின் நிலை என்ன?
   அ. மதமாற்றத்தில் எந்த மதக் குழுக்கள் ஈடுபட்டுள்ளன?
   ஆ. எந்த மதக் குழுக்கள் மதம் மாறுவதற்கான வாய்ப்புகள் அதிகம்?
   இ. மத மாற்றத்திற்கான பொதுவான காரணங்கள் என்ன?

6. 2023 ஆம் ஆண்டு முதல் இம்மாவட்டத்தில் மதத் தீவிரவாதத்தின் நிலை என்ன (இதில் அனைத்து மதங்களின் தற்போதைய நிலையும் அடங்கும்)?
   அ. மாவட்டத்தில் தீவிரவாதத்தின் (எந்த மதக் குழுவிலிருந்தும்) ஏதேனும் எதிர்காலப் போக்குகளை நீங்கள் காண்கிறீர்களா?

7. இந்த மாவட்டத்தில் வழிபாட்டுத் தலங்களைக் கட்டுவதற்கு ஏதேனும் மதக் குழுக்களுக்கு சிரமங்கள் உள்ளனவா?
   அ. ஆம் எனில், என்ன வகையான சிரமங்கள் உள்ளன?

8. இந்த மாவட்டத்தில் உள்ள மதக் குழுக்களுக்குள் அல்லது ஒரு மதக் குழுவின் வெவ்வேறு துணைக்குழுக்களுக்குள் ஏதேனும் மோதல்கள் அல்லது பிரச்சினைகள் இருப்பதை நீங்கள் கவனிக்கின்றீர்களா?
   அ. அப்படியானால், இந்தப் பிரச்சனைகள் என்ன என்பதையும் அவற்றின் பின்னணியில் உள்ள காரணங்களையும் விளக்க முடியுமா?

9. இந்த மாவட்டத்தில் உள்ள பெண்களுக்கு அவர்களின் மதத்துடன் பிணைந்துள்ள குறிப்பிட்ட பிரச்சனைகள் என்ன?

10. இந்த மாவட்டத்தில் தொல்பொருள் இடங்கள் தொடர்பான ஏதேனும் சிக்கல்கள் உள்ளனவா? சிக்கல்கள் இருந்தால், அவை என்ன?

11. 2023 ஆம் ஆண்டு முதல் இந்த மாவட்டத்தில் மத சுதந்திரத்தை மீறுவதில் ஈடுபட்டுள்ள முக்கிய அரசு மற்றும் அரசு சாரா செயற்பாட்டாளர்கள் யார்?

12. மத சுதந்திர நிலையில் மாவட்டத்தில் இராணுவத்தின் பங்கு என்ன?
    அ. அவர்கள் இந்த மாவட்டங்களில் சில மதக் குழுக்களுக்கு ஆதரவாகவும் ஏனையவர்களுடன் முரண்படுகின்றார்களா? அப்படியானால் விளக்கவும்.

13. மாவட்டத்தில் மதச் சுதந்திரம் மீறப்படுவது தொடர்பாக அரசாங்கத்தின் பதில் என்ன?
    அ. அவர்கள் எவ்வாறு தலையிடுகின்றார்கள்?
    ஆ. உங்கள் எண்ணத்தில் அது நேர்மறையான தலையீடா அல்லது எதிர்மறையான தலையீடா?

14. மத சுதந்திரம் குறித்த மோதல்களில் ஏதேனும் போக்குகள் அல்லது வடிவங்களை நீங்கள் காண்கின்றீர்களா? அப்படியானால் அவை என்ன?

15. மத சுதந்திரப் பிரச்சினைகளைக் கவனத்தில் கொள்ள எதிர்காலத்தில் மாவட்டத்தில் என்ன மாதிரியான பணிகள் செயல்படுத்தப்பட வேண்டும்? உங்கள் பரிந்துரைகள் என்ன?

